# கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது

# FAITH WITHOUT WORKS IS DEAD

**50-0822**

(தமிழாக்கம்: சகோ. S. A. ஜெபகுமார்)

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது

## (FAITH WITHOUT WORKS IS DEAD)

ஆகஸ்டு 22, 1950

கூடார கூட்டம், கிளிவ்லாண்ட், ஒஹியோ, அமெரிக்கா

50-0822

மாலை வணக்கம். இன்றிரவு மீண்டும் திரும்பி வந்து, இங்கே ஆராதனையில் இருப்பதும், தேவன் இன்றிரவு யாரோ ஒருவரை அற்புதமாக சுகப்படுத்தி, அவர் தாமே மகிமையை பெற்றுக்கொள்வார் என்பது நம் ஒவ்வொருவருக்கும் அதிக முக்கியமானதாக இருக்கும் என்பதை நம்புவதும் சந்தோஷமாயுள்ளது...?... தேவன் அதை அருளுவார் என்று நாம் அனைவரும் ஒரே இருதயத்தோடும், ஒரே மனதோடும் அவரை விசுவாசிப்போம் என்று நிச்சயமுடையவனாயிருக்கிறேன். நீங்கள் அதை விசுவாசிக்கவில்லையா? நான் என்னுடைய முழு இருதயத்தோடும் அதை விசுவாசிக்கிறேன்.

(ஒலிநாடா ஒலிப்பதிவானது, ஏறக்குறைய முதல் 15 பத்திகள் மிகவும் இரைச்சலாகவும், உரத்த சத்தமான ரீங்கார ஒலியுள்ளதாகவும் உள்ளது. அதன்பிறகு தெளிவாகவும், ஏறக்குறைய அனைத்துமே புரிந்து கொள்ளக் கூடியதாகவும் உள்ளது - தமிழாக்கியோன்.) இன்றிரவு சிறிது களைப்பாயுள்ளது, மேலும் நான்... அப்படியே... அதைப்போன்று காணப்படுகிறது. நான்-நான் வாஞ்சித்தேன்...?... அது. இப்பொழுது, சரீரபிரகாரமாக களைப்பாக இருக்கும் அளவுக்கு, இல்லை. அது ஒரு... மனரீதியாக களைப்பாக உள்ளது என்று நீங்கள் அதை அழைப்பீர்கள் என்று நான் யூகிக்கிறேன். அது அப்படியே, அது அப்படியே அந்தவிதமாக

காணப்பட்டது — உங்களுடைய பலம் அப்படியே போய் விடுகிறது, உங்களுக்குத் தெரியாது...?... அது எங்கே போய் விட்டது, ஆனால் அது போய்விடுகிறது. நாம் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்தால், அவரே நம்முடைய பெலனாயிருக்கிறார்.

2. இன்று ஒரு முழு நிறைவான நாளாக உள்ளது. நான் இன்று கூட்டங்களைக் குறித்து அதிகமாக ஜெபித்திருக்கிறேன். எனவே நான் வெள்ளிக்கிழமை வீட்டில் இருக்கப்போகிறேன் என்பதை அறிந்து அநேக ஜனங்கள் தந்திச்செய்திகளை அனுப்பியிருந்தார்கள், தொலை பேசியிலும் அழைத்துக் கொண்டிருந்தார்கள். மேலும் பிறகு அதனூடாகப் போய்... முதலாவது இருக்கப் போகிறவர் யார் என்பதை அவர்கள் அறிய விரும்புகிறார்கள்.

அது ஏனென்று நீங்கள் இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? அது அப்படியே தொடர்ந்து போய்க் கொண்டேயிருக்கிறது, உங்களுக்கு இளைப்பாற நேரமே இருக்காது. அதுதான் அது. நான்... நான் இளைப்பாறும்படியான ஒரே வழி என்னவெனில், நான் வீட்டிற்குப் போகாத சமயத்தில் வேறு எங்காவது ஓரிடத்திற்குப் போய், சிறிது நேரம் மறைந்திருக்கிறேன். அதன்பிறகு நீங்கள் அவ்வாறு செய்யும்போது, ஏன், கூட்டங்களில் சிந்திப்பதற்கு அது உங்களை மோசமாக உணரச் செய்கிறது, அப்படியானால் சிறு பிள்ளைகளுக்காக ஜெபிக்கும்படி உங்களால் போக முடியாது, நீங்கள் அப்படியே - தாய்மார்களும், ஊனமுற்ற ஜனங்களும் ஜெபிக்கும்படியாக இரவில் அழைத்துக் கொண்டிருப்பதை உங்களால் கேட்க முடிவதைப்போன்று தோன்றுகிறது. அது என்னவென்றால், அது அவர்களுடைய கதறுதலின் ஜெபங்களாக உள்ளது ...?... ஜெபித்துக் கொண்டிருத்தல். சற்று - சற்று சிந்தித்துப் பாருங்கள்...

3. நான் அப்படியே... சிலசமயங்களில் நான் மேலே மலைகளில் போகும்போது... நான் கூட்டத்தினரைக் குறித்த ஒரு காட்சியைக் கொண்டிருப்பேன். நான் உட்காருவேன், ஒருவேளை ஒரு மரத்தின் பக்கத்தில் சற்று முழங்கால்படியிட்டு, அப்படியே ஜெபித்து ஜெபித்து ஜெபித்துக் கொண்டிருப்பேன். தேவன்

அவர்களை சுகப்படுத்துவார். மேலும் அது என்னுடைய அக்கறையாயிருக்கும்படி... என்னே, ஜனங்கள் சுகமடைவதைக் காண நான் விரும்புகிறேன். நல்ல ஆரோக்கியத்தைக் குறித்து என்னைக் காட்டிலும் இனிமேல் யாருமே சந்தோஷமடையவோ, பாராட்டவோ முடியாது, நான் என்னுடைய வாலிப நாட்களில் மிக மிக வியாதியஸ்தனாக அதிக நேரம் செலவழித்திருந்த சமயத்தில். நான்... ஒரு பலவீனம், குறிப்பாக, வயிற்றுக் கோளாறினால் வருடக்கணக்காக அவதிப்பட்டேன், பார்லி தண்ணீரைக் குடித்து, மெல்லிய கரகரவென்றிருக்கும் பிஸ்கட் துண்டுகளை சாப்பிட்டு விட்டு, ஒருக்கால் வெளியே நடக்கத் தொடங்குவேன், சரியாக அதை வாந்தியெடுக்கத் தொடங்கி விடுவேன்...?... ஏதாவது. எல்லா வகையான மருத்துவர்களிடமும், மருத்துவமனைகளுக்கும் போனேன், எதுவுமே செய்ய முடியவில்லை. அவர்கள், "நல்லது... உனக்கு எதுவுமே உதவிசெய்ய முடியாது" என்றனர். அவர்கள் எனக்கு மருந்தையும் மற்றும் ஒவ்வொன்றையும் கொடுத்தனர், ஆனால் அதை நிறுத்த முடியவில்லை, அது தொடர்ந்து அதே விதமாகவே இருந்தது.

4. ஏறக்குறைய ஏழு அல்லது எட்டு வருடங்கள் தொடர்ந்து அப்படியே சாப்பிட்டேன். நான் மேஜையை பார்க்க முயற்சிக்கவில்லை, சாப்பிட்டு விட்டு அமர்ந்திருக்கும் ஜனங்களையும் காணும்படி முயற்சிக்கவில்லை. என்னுடைய பார்லி தண்ணீரை குடிக்கவே முயற்சித்துக் கொண்டிருப்பேன். உங்களுக்குத் தெரிந்திருக்கும், அது ஒருவேளை காலை உணவுக்காக கொஞ்சம் உலர்கொடி முந்திரி பழ ஜூஸையும், இரவு உணவுக்காக பார்லி தண்ணீரையும், கரகரவென்றிருக்கும் ஒரு சில மெல்லிய பிஸ்கட் துண்டுகளையும், சோடா பிஸ்கட் துண்டுகளையும் பார்லி தண்ணீரோடே சாப்பிடுவேன். ஒருவேளை எப்போதாவது முழுவதும் கோதுமை மாவினால் செய்யப்பட்ட சற்று இனிப்பான மெல்லிய பிஸ்கட்டில் ஒன்றாக இருக்கலாம்...?... அதைப் போன்றவைகளைத்தான் புசித்தேன். (ஒலிநாடாவில் மீண்டும் திரும்ப அதே பகுதி ரிப்பீட் ஆகிறது - ஆசிரியர்.)

நான் ஜனங்களைக் காணும்போது, அவர்கள்... நான் வேலைக்குச் சென்று, மண்வாரியைப் பிடித்து மண்வெட்டி, முழு நாளும் வேலை செய்து, சாப்பிடப் போய், வெறுமனே பார்லி தண்ணீரைக் குடிப்பேன், உங்களுக்குத் தெரியும்...?... (ஒலிநாடாவில் மீண்டும் திரும்ப அதே பகுதி ரிப்பீட் ஆகிறது - ஆசிரியர்.) அந்த மனிதர்கள் சாப்பிடுவதை நான் கவனித்துப் பார்ப்பேன், என்னுடைய வாயிலோ தண்ணீர் இருக்கும். எனக்குத் தொடர்ந்து எல்லா நேரமும் ஒரு தலைவலி வந்து கொண்டிருந்தது. அதுதான் காரியமாக இருந்தது. நான் அப்படியே ஒரு பெரிய கண்ணாடியை அணிந்து கொண்டு சுற்றிலும் தொடர்ந்து நடந்து சென்றேன், அப்படியே... சிலசமயங்களில் நான் அப்படியே விழுந்து விடுவேன்... என்னை வழிநடத்திச் செல்ல வேண்டியிருந்தது, நான் மிகவும் குருடனாய் இருந்தேன்.

எனக்கு ஏறக்குறைய 118 பவுண்டுகள், 120 பவுண்டுகள் எடையே இருந்தது. இப்பொழுது அதை நினைத்துப் பார்க்கும் போது, அந்த வேதனைகளினூடாகக் (கடந்து சென்ற) அந்த எல்லா வருஷங்களுக்கும் பிறகு, இப்பொழுது என்னுடைய கண்கள் இருபதுக்கு இருபது என்றிருக்கிறது. மனித கண்கள் எவ்வளவு பரிபூரணமாக இருக்க முடியுமோ அவ்வளவு பூரணமாக இது இருக்கிறது. எனக்கு ஐந்து அடிகள் தூரத்தில் இருக்கும் அச்சிடப்பட்ட செய்தித்தாளையும் என்னால் வாசிக்க முடியும். என்னுடைய - என்னுடைய வயிறு... நான் அதற்காக மிகவும் நன்றியுள்ளவனாய் இருக்கிறேன், நன்றாக உணருகிறேன். எனக்கு 153 பவுண்டுகள் எடையுள்ளது. நான் மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.

5. நான் ஒரு சிறு பையனாக இருந்த போது, நான் - நான் ஐரிஸ் வகுப்பை சேர்ந்தவனாக இருந்தேன். நிச்சயமாக, என்னுடைய மனமாற்றம் அதை மிக அதிகமாக மாற்றவில்லை. மேலும் நான்...

யாரோ ஒருவர், "ஒரு ஐரிஸ்காரனுக்காக எந்த பாக்கியமாவது இருக்கிறதா என்று நீ எண்ணிப் பார்த்துண்டா?" என்று கேட்டார்.

நான், "ஆம். அவர்களில் ஒருவன் பரலோகத்தில் இருக்கிறான், அது மிகாவேல்" என்றேன். எனவே நான் - நான், "அது..." என்றேன். அப்படியானால் எனக்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் அறிவேன்.

ஆனால் அவர்கள்... எல்லா... நான் ஒரு சிறு பிள்ளையாய் இருந்த போது, நான் வழக்கமாக நன்றாக குத்துச் சண்டையிட விரும்புவேன். இப்பொழுது தான், நாம் அங்கே ஃபால்ஸ் சிட்டி சாம்பியன்ஷிப் போட்டியைக் கொண்டிருந்தோம். நான் அதில் அதிக அளவில் குத்துச் சண்டையிட்டேன். நான் எட்டு அல்லது பத்து சுற்றுகள் சண்டையிடக்கூடிய அளவுக்கு நிற்க வேண்டியிருந்தது. நான் பதினைந்து நேரடியான தொழில்முறை சார்ந்த சண்டைகளில் வென்றேன். ஹன்டிங்டன், வெஸ்ட் விர்ஜீனியா, ஈவான்ஸ்வில், இந்தியானா என்ற இடத்திருந்து வந்த பில்லி ஃபிரிக் (Billy Frick) என்ற ஒருவனோடு குத்துச்சண்டை அரங்கில் சண்டையிட்ட என்னுடைய பதினாறாவது சண்டையில் தோல்வியடைந்தேன். அதில் சண்டையிட்டேன்... அவர்களில் ஒருவன் வெற்றி தோல்வியில்லாமல் ஆட்டத்தை (draw) கொடுத்தான், மற்றொருவன் அவனுக்கு வெற்றிப்புள்ளியைக் கொடுத்தான், ஏனென்றால் அவன் உண்மையிலேயே அதைச் சரியாகச் செய்தான். என்னுடைய ஜீவியத்திலேயே முதல் தடவையாக ஒரு வாக்குறுதியைக் கொடுப்பதற்காக தேவனை நோக்கிப் பார்த்தேன். அந்த இரவில் அந்த குத்துச்சண்டை அரங்கத்தில் நான் போன போது, நானே நிச்சயமில்லாதிருந்தேன். நான், "நல்லது, நான்... இந்தத் திருவாளரிடமிருந்து நான் வரும்படி நீர் என்னை அனுமதித்தால், நான் - நான் இனிமேல் அதை (குத்துச் சண்டையைச்) செய்ய மாட்டேன்" என்றேன்.

எனவே அது முதற்கொண்டு குத்துச்சண்டை அரங்கத்திலேயே அதை நான் நிறுத்தி விட்டேன். ஆனால் நான் மற்றொரு எதிராளியோடு சண்டையிட்டுக் கொண்டிருக்கிறேன், அதுதான் பிசாசு. அது சரியே.

6. நான் இன்றிரவு மிகவும் சந்தோஷமாயிருக்கிறேன்... அது மிகவுமாக...?... அது தட்டுகிறது, மற்றும் என்னை இழுக்கிறது, அதைப் போன்ற காரியங்களையும் செய்கிறது. ஆனால் அது அவ்வாறு இருந்தாலும் கூட, நமக்கு ஒரு மகத்தான எஜமான் உண்டு. நம்மால் சுவிசேஷத்தை அப்படியே முழுவதுமாகவும் சுதந்திரமாகவும் பிரசங்கம் பண்ணி, அது போகும்படி விட முடியும், அந்தத் துணிக்கைகள் அவைகளுக்கு விருப்பமான எங்கு வேண்டுமாயினும் விழட்டும். மீதியானவற்றை தேவனே பார்த்துக் கொள்கிறார்.

இப்பொழுது, நான் இதைக் கூற விரும்புகிறேன். நான்-நான் அதைக் கூறுவதைக் குறித்து சற்று எச்சரிக்கையாயிருக்கிறேன், ஆனால் இன்றிரவு நான் சற்று கொஞ்சம் வஸ்திரம் அணிந்திருப்பதாகவே உணருகிறேன். நீங்கள் அதை கவனித்தீர்களா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை, அது ஒரு சகோதரி எனக்குக் கொடுத்த ஒரு சூட். நான்-நான் அதை மிகவும் பாராட்டுகிறேன். உங்களுக்கு மிகவும் நன்றி. அது... தேவன் அந்த சகோதரியை ஆசீர்வதிப்பாராக. உங்கள் எல்லாருக்குமே நன்றி.

ஜனங்கள் அருமையான கழுத்துப் பட்டைகளையும், சட்டைகளையும், காலுறைகளையும் எனக்கு அனுப்பித் தருகிறார்கள். நான் அதைக் குறித்த எதையாகிலும் இந்த மேடையிலிருந்து கூற எனக்குக் கொஞ்சம் பயமாக இருந்தது. ஒருக்கால் நான்... என்று யாரோ ஒருவர் நினைக்கலாம். தவறான கருத்தை உண்டாக்கி விடலாம், நான் அதை அப்படியே கூறிக் கொண்டிருக்கிறேன், ஏனென்றால் ஒருக்கால்... ஓ, இல்லை. அவ்வாறு எண்ணி விடாதீர்கள். ஆனால் அது-அது மிகவும் பாராட்டுக்குரியது. ஜனங்கள் அவ்விதமாக காரியங்களைச் செய்வதை நான் அனுமதிக்க முடியவில்லை, அப்படியானால் நான் ஏதோவொரு விதத்தில் அதைக் குறிப்பிடுவதில்லை. சிலர் தங்கள் முகவரியைக் கூட அதில் எழுதுவதில்லை என்பது உங்களுக்குத் தெரியும்.

அந்த சூட் துணியை எனக்கு வாங்கிக் கொடுத்த பெண்மணியின் பெயரை என்னால் கூற முடியவில்லை. என்னால் அவளை ஒருபோதும் அனுமதிக்க முடியவில்லை - வலது கை... வலது கை செய்கிறதை இடது கை அறியாதிருக்கக் கடவது என்று நினைக்கிறேன். ஆனால் என்னுடைய இருதயத்தின் ஆழத்திருந்து நான்-நான் அதைப் பாராட்டுகிறேன்.

7. என் அன்பு சகோதரியிடமும், மற்றவர்களாகிய உங்கள் எல்லாரிடமும் இதைக் கூறுகிறேன். நான் அதைக் குறித்து பாராட்டுவதைக் காட்டிலும் அதிகமாக பாராட்டுகிற எவருக்கும் இனி உங்கள் ஜீவியத்தில் நீங்கள் எதையுமே ஒருபோதும் கொடுக்க மாட்டீர்கள். அது சரியே. நான் அதைப் பாராட்டுகிறேன்.

"மிகவும் சிறியவராகிய (அதுதான் நான்) என்னுடைய சிறியவர்களுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" என்று வேதாகமம் கூறுகிறது. நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக் கொள்ளுகிறவன், நீதிமானுக்கேற்ற பலனை அடைவான். தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான் (மத்தேயு 10:41).

இப்பொழுது, தேவன் உங்களுக்கு அதை நூறு மடங்காக திருப்பித் தருவார் என்று நம்புகிறேன். நான் அதில் நிச்சயமுடையவனாயிருக்கிறேன், தேவன் என்னுடைய சரியான மனநிலையில் நான் இருக்கும்படி என்னை அனுமதிப்பாரானால், நான் அதை அணிந்து கொண்டு ஒருபோதும் மதுக்கடையில் இருக்கவே மாட்டேன், ஏனென்றால் நான் அந்த இடங்களுக்கு செல்வதில்லை. நான் ஒரு மதுக்கடையிலும் இருந்ததே கிடையாது. நான்... நான்-நான் சபைக்கும், என்னுடைய வீட்டிற்கும், மற்றும் வியாதியஸ்தரை சந்திக்கும்படி வெளியேயும் மாத்திரமே செல்கிறேன். அந்த இடங்களுக்கு தான் நான் செல்கிறேன்.

இந்த சூட்டை அணிந்தபடி நான் பிரசங்கிக்கையில், நான் ஆயிரக்கணக்கான ஜனங்களை ஆதாயப்படுத்தும்படி தேவன் செய்வார் என்று நம்பிக்கையாயிருக்கிறேன். பரிசுத்த

ஆவியானவர் மிகவுமாக அபிஷேகித்து, என்னுடைய அருகில் வரும் ஜனங்களும் கூட, அவர்களில் அநேகரும், தாங்கள் ஆர்கன்ஸாஸில் செய்தது போல, தொட்டு, அவருடைய மகிமையான வல்லமையினால் சுகமடைய வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

மகிமையில், வாழ்க்கை எல்லாம் முடிந்து, நம்முடைய பூமிக்குரிய பிரயாணம் முடிவு பெறும் போது, ஒரு மகத்தான வெண் வஸ்திரத்தை அவர் தரிப்பிப்பதை நான் காணும்படியாக அருகில் நின்று கொண்டிருப்பேன் என்று நம்புகிறேன். அவருடைய நீதியின் (வஸ்திரத்தை) உங்களுக்கு உடுத்துவிக்கிற பிதாவை நோக்கி நான் என்னுடைய தலையை வணங்கி, உங்களுக்காக கர்த்தருக்கு நன்றி கூறுவேன். தேவன் எப்பொழுதும் உங்களோடு இருக்க வேண்டும் என்பதே என்னுடைய ஜெபமாயுள்ளது.

8. ஒருசமயம், யாராவது ஒருவர் உங்களுக்குக் கொடுக்கும் ஒரு அன்பளிப்பைப் பெற்றுக்கொள்ள உரிமை இல்லை என்று நான் எண்ணியிருந்தேன். சகோதரன் ஷேரிட் (Brother Sharritt) என்ற மனிதர் தான் அதைக் குறித்து என்னைத் திருத்தி சரிப்படுத்தினார். அவர், "சகோதரன் பிரன்ஹாமே, எந்தக் காரியத்தின் பேரிலும் நான் உம்மைத் திருத்தி சரிப்படுத்துவதை வெறுக்கிறேன்" என்றார். ஆனால், "நீர் அங்கே (அதைத்) தவறாகக் கருதிக் கொண்டிருக்கிறீர். அந்த ஜனங்கள் தாங்கள் வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ளாதபடிக்கு நீர் காரணமாய் இருக்கிறீரே; அவர்கள் தங்களுடைய - தங்களுடைய பலனை இழந்து விடும்படி நீர் காரணமாய் இருக்கிறீர். பெற்றுக் கொள்வதைக் காட்டிலும் கொடுப்பதே அதிக பாக்கியமுள்ளது" என்றார்.

அதன்பிறகு அவர் தம்முடைய கதையை என்னிடம் கூறினார். நான்... நான் அதை இப்பொழுதே கூறலாம் என்று நம்புகிறேன். கொஞ்ச நேரமாகவே அது என்னுடைய மனதில் வந்து கொண்டேயிருக்கிறது. அவர் அரிசோனாவிலுள்ள போனிக்ஸை

சேர்ந்த ஜான் பி. ஷேரிட் (John B. Sharritt), அவர் கூட்டத்தின் வியாபார மேலாளர்களில் ஒருவராவார்...

உங்களில் அநேகர் அவரை சந்தித்திருக்கிறீர்கள், அதில் சந்தேகமில்லை. இங்கேயிருக்கும் யாருக்காவது சகோதரன் ஷேரிட் அவர்களை அறியும்படியான வாய்ப்பு கிட்டியதா, அல்லது அரிசோனாவிலுள்ள போனிக்ஸை சேர்ந்த ஜான் ஷேரிட் அவர்களை யாருக்காவது தெரியுமா? நல்லது, அவர் ஓஹியோவிலுள்ள சின்சினாட்டியில் இருக்கும் தேவனுடைய வேதாகமப் பள்ளியிலிருந்து வந்த (God's Bible School) ஒரு மனிதராவார்.

அந்த கல்லூரியின் தலைவர் சற்று முன்பு தான் நீண்ட தூரத்திலிருந்து தொலைபேசி மூலமாக என்னிடம் பேசிக் கொண்டிருந்தார், அவர் மிகவும் அருமையான ஒரு மனிதர், சகோதரன் ஸ்டான்லி அவர்கள். உங்களில் அநேகர் சகோதரன் ஸ்டான்லி அவர்கள் பேசுவதைக் கேட்டிருக்கிறீர்கள்... எழுப்புதல்களைக் கொண்டு வருகிற (revivalist) தேவனுடைய மனிதர். அவர் இப்பொழுது என்னுடைய வீட்டில் எனக்காக காத்துக் கொண்டிருக்கிறார்.

9. அவரும் சகோதரன் ரெய்மன்ட் டி. ரிச்சி (Brother Raymond T. Richey) அவர்களும்... டெக்ஸாஸிலுள்ள ஹூஸ்டனைச் சேர்ந்த உங்களில் அநேகர் அவரைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள், இல்லையா? அவர் அசெம்பிளிஸ் ஆப் காட் சபையைச் சேர்ந்தவர், அவருக்கு அங்கே ஒரு சுவிசேஷ... உண்டு.

இப்படியிருக்க சகோதரன் ஷேரிட் அவர்கள், உலகப் பிரகாரமான பொருட்கள் அவரிடம் மிக அதிகமாக கிடையாது, அவர் அப்படிப்பட்ட ஒரு நபராகப் பிறந்திருந்தார். அவருடைய தகப்பனார் மிகவும் ஏழ்மையான மனிதர், மேலும் அவர் மிகவும் போக்கிரியாக இருந்தார். அவர் இவருடைய தாயாரை விட்டுவிட்டார். ஏறக்குறைய 15 வருடங்களுக்கு முன்பு, ஜான் ஷேரிட் அவர்கள் வெளியே மிசௌரியிலுள்ள செயின்ட்

லூயிஸில் அவருக்கு முன்பாக ஒரு துண்டு ஒரு நிக்கல் காசு என்றவிதமாக ஆப்பிள் பழங்களை விற்றுக் கொண்டிருந்தார். ஆப்பிள் பழங்கள்... ஒரு சிறு... அவருடைய தாயாரை கவனித்துக்கொள்ள சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஒரு தள்ளு வண்டியையும் உடையவராய் இருக்க அவரால் முடியவில்லை.

அவர் திக்கி திக்கி பேசுவது போன்று பேசுபவர். அவரால் பேசவே முடியவில்லை. நீங்கள் போய் பேசுவீர்களானால், அப்படியே நிறுத்தி விட்டு...?... அவர் அப்படியே... அவர் மீண்டும் முயற்சிப்பார். உதாரணமாக, அவர், "மாலை வணக்கம்" என்று கூறப் போவதாக இருந்தால், அவர், "மாா..." என்று கூறுவார் (சகோதரன் பிரன்ஹாம் எளிதில் புரிந்து கொள்ள முடியாத சத்தத்தை உண்டாக்குகிறார் - ஆசிரியர்.) சற்று நேரம் பொறுத்து, "மாா..." என்பார். ஏறக்குறைய அந்தவிதமாகத்தான் அவர் அதைப் பேச முயற்சிப்பார்; அது மிகவும் மோசமாக இருந்தது...?...

10. நல்லது, ஆனால் அவர் ஒரு சிறு பையனாக இருந்த போதே கர்த்தரைத் தேடத் தொடங்கினார். எல்லா பையன்களும் வாலிப பெண்களுடன் வெளியே வெவ்வேறு இடங்களுக்கு போய்க் கொண்டிருப்பார்கள். அவரோ, "கர்த்தாவே, நான்-நான் உம்மைத் தான் நம்பியிருக்கப் போகிறேன். நான்-நான்-நான்-நான் வெளியே வாலிப பெண்களுடன் பேச முயற்சிக்கிறேன், அது மிக மோசமாக இருக்கிறதே. ஆனால் நான் விவாகம் செய்து பிள்ளைகளைக் கொண்டிருக்க விரும்புகிறேன். நான் உம்மையே சேவிக்கப் போகிறேன், நீர் எனக்கு ஒரு மனைவியைக் கொடும்" என்றார். அவர் அதைக் கர்த்தரிடமே ஒப்புவித்தார்: அப்போது அவருக்கு ஏறக்குறைய 25 வயது.

அவர் இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு பெண்ணின் பக்கமாகவும் கடந்து போயிருக்க முடிந்திருந்தாலும், அவருக்கு கிடைத்த மனைவியைக் காட்டிலும் மிகச்சிறந்த ஒரு மனைவியை அவரால் பெற்றிருக்க முடிந்திருக்காது. தேவன் அவருக்கு ஒரு அழகான சிறிய பரிசுத்தவாட்டியை கொடுத்தார்.

ஆனால் ஒரு பெரிய காரியம் என்னவென்றால் அவர் பிள்ளைகளை மிகவும் அதிகமாக நேசித்தார்… அவளோ மலடியாக இருந்தாள். அவர் விவாகம் செய்து, அநேக, அநேக, வருடங்கள் ஆகி விட்டன, ஆறு, ஏழு, எட்டு, பத்து வருடங்கள் ஆகி விட்டன, அவருக்கு பிள்ளை இல்லை.

அவர் தெருவில் கான்கிரீட்டை உடைத்துக் கொண்டிருந்தார், அவருக்கு ஜீவனம் நடத்த ஒரு மணி நேரத்துக்கு 25 சென்ட் காசுகள் (cents) கிடைத்தன. அவர்கள் தங்கள் பணத்தை சேமித்து வைத்து, அவர்கள் மூன்று அறைகள் கொண்ட ஒரு சிறு வீட்டை வாங்கினார்கள். கடுமையான பொருளாதார மந்தநிலை இருந்த முற்காலத்தில் அதற்கு ஏறக்குறைய 1500 டாலர்கள் செலவானது என்று நினைக்கிறேன். அவர்கள் பணத்தை செலுத்தி, செலுத்தி, செலுத்தி விட்டிருந்தார்கள். மேலும்…?… அவர்கள் கொடுக்க வேண்டிய அந்த பணம் எல்லாவற்றையும் கொடுக்கும் மட்டுமாக அவர்கள் பணத்தை செலுத்தினார்கள்.

11. ஆனால் சற்றேறக்குறைய அந்தப் பணம் எல்லாவற்றையும் செலுத்தித் தீர்த்த போது, அந்த சமயத்தில், அவர்களுக்கு போனிக்ஸில் ஒரு எழுப்புதல் உண்டாயிருந்தது. அங்கே டாக்டர் சட்டன் (Doctor Sutton) என்ற பெயருடைய ஒரு மனிதர் இருந்தார். அவரை உங்களுக்குத் தெரியுமா அல்லது தெரியாதா என்று தெரியில்லை, ஒரு…?… அவர் அங்கே போனிக்ஸிற்கு வந்திருந்த ஒரு சுவிசேஷ - முழு சுவிசேஷ பிரசங்கியார் ஆவார், அவர் சுற்றுலா பயணிகளுக்கான ஒரு முகாமில் (tourist camp) தங்கியிருந்தார்.

ஒருநாள் இரவு, கர்த்தர் சகோதரன் ஷாரிட் அவர்களுக்கு ஒரு சொப்பனத்தில் தோன்றினார். அவர் இவரைப் பார்த்து, "உன்னுடைய உலோக பாத்திரப் பண்டங்களையும், உன்னுடைய துணிமணிகளையும் எடுத்துக் கொண்டு, உன்னுடைய மனைவியையும் அழைத்துக் கொண்டு உன் வீட்டை விட்டுப் புறப்படு, இந்த வீட்டை சகோதரன் சட்டனுக்கு கொடுத்து விடு" என்றார்.

அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். மனம் சோர்ந்து போன நிலையில், ஏறக்குறைய பத்து வருடங்கள் கடுமையாக உழைத்து, பாடுபட்டு, சேமித்து வைத்த பிறகு, கர்த்தர் அந்த இடத்தை டாக்டர் சட்டன் அவர்களுக்குக் கொடுத்து விடும்படி அவரிடம் கூறினார், டாக்டர் சட்டன் அவர்களோ எல்லாராலும் நன்கு அறியப்பட்ட ஒரு-ஒரு பிரபலமான ஊழியக்காரராய் இருந்தார்.

சகோதரன் ஷாரிட், “சரி, கர்த்தாவே” என்றார்.

அவருடைய சிறு வாழ்க்கைத் துணையிடம் அவர் சென்று, “தேனே, கர்த்தர் என்னிடம் பேசி, நம்முடைய வீட்டை... அவர்களிடம் கொடுத்து விடும்படி என்னிடம் கூறினார். நம்முடைய பாத்திர பண்டங்களையும், நம்முடைய துணிமணிகளையும் எடுத்து விட்டு, இந்த வீட்டை டாக்டர் சட்டன் அவர்களிடம் கொடுத்து விடுவோம்” என்றார்.

அவர் சென்று, அவளிடம் கூறின போது, அவள், “சரி, அன்பே” என்றாள். அவள் தனது கணவனை நம்பினவளாய், “அதைச் செய்யும்படி கர்த்தர் உங்களிடம் கூறியிருப்பாரென்றால், நமக்குக் (கொடுக்கும்படி) தேவன் வேறு எதையாவது வைத்திருப்பார்” என்றாள்.

12. எனவே அவள்... இப்பொழுது அவரிடம் இருந்த எல்லாவற்றையுமே அவர் கொடுத்து விட்டார். அந்த இரவில் அவருடைய மனைவியை அழைத்துச் செல்ல அவருக்கு ஒரு இடமும் இல்லாதிருந்தது. எழுபத்தைந்து காசுகள் (cents) பெறுமானமுள்ள சுற்றுலா பயணிகளுக்கான அந்த முகாமை அவர் கண்டுபிடித்தார். அவர்கள் அந்த இரவில் அந்த சுற்றுலா பயணிகளுக்கான முகாமில் தங்கி, தெருவில் கான்கிரீட் கட்டைகளை உடைத்து மணிக்கு 25 காசுகள் (cents) சம்பாதித்தார் (அது உண்மை.), இவ்வாறு தினமும் வேலை செய்தார்... அவர் ஒரு மகத்தான பெரிய மனிதர், அவருக்கு ஏறக்குறைய 225 பவுண்டுகள் (சுமார் 102 கிலோகிராம் - தமிழாக்கியோன்) எடை இருக்கும்.

ஏறக்குறைய ஒரு வாரம் கழித்து, ஏதோவொரு பணக்கார சீமாட்டி அவரைப் பார்த்து, தனக்கு சொந்தமான மோட்டார் வண்டி பழுது பார்க்கும் இடத்திற்குப் பின்புறத்தில் தன்னுடைய பொருட்களில் சிலவற்றை இடம் மாற்றுவதாகவும், அவளுடைய மோட்டார் வண்டி பழுது பார்க்கும் இடத்தில் தங்க அவருக்கு விருப்பமா என்று அவரிடம் கூறினாள், அது மேலே கேமல்பேக் மலையை (Camelback Mountain) நோக்கிய திசையில் இருக்கிறது (அந்த இடம் எங்கே உள்ளது என்று உங்களுக்குத் தெரியும்), அது ஒருவிதத்தில் தேசத்திலுள்ள பெரிய உயர்குடி மக்கள் வசிக்கும் பழைய பகுதியாக இருக்கிறது. அவள், "நீர்... நீர் என்னுடைய முற்றத்தை ஒழுங்காக வைத்திருப்பீரென்றால்...?... நீர் உள்ளே வரலாம், புல்வெளிக்கு தண்ணீர் ஊற்றுவதையும் மேலும் மற்ற காரியங்களையும் தொடர்ந்து செய்யும். நீர் என்னுடைய மோட்டார் வண்டி பழுது பார்க்கும் இடத்தில் இலவசமாக தங்கிக் கொள்ளலாம்" என்றாள்.

அவர் ஒரு பொருளும் இல்லாமல் அங்கே மேலே இடம் பெயர்ந்தார். அவருக்கு சில பெட்டிகளும், அவருக்கு ஒரு...?... ம் கிடைத்தது, அவர் தரையில் படுத்தார், அவருக்கு ஒரு மெத்தையும் கிடைத்தது...?... அவரும் அவருடைய மனைவியும் அங்கே தான் உறங்கினார்கள்.

சகோதரன் சட்டன், "சகோதரன் ஷாரிட் அவர்களே, எனக்கு வேண்டாம்..." என்றார்.

இவரோ, "அதைக் கொடுக்கும்படி கர்த்தர் தான் என்னிடம் கூறினார். அதெல்லாம் சரிதான்" என்று கூறிவிட்டார்.

13. அவர் அவ்விதம் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார். ஏறக்குறைய ஒரு வருட காலம் அவ்விதமாக இருந்து, ஒரு நல்ல கிறிஸ்தவ ஜீவியம் செய்தார். கடைசியாக, அவர் தங்கியிருந்த (அந்த வீட்டின்) சீமாட்டி கோடீஸ்வர பெண்மணியாக இருந்தாள். அவள் அவருடைய நேர்மையைக் கண்டாள். அவர் பாபிலோனில் இருந்த தானியேலைப் போன்று ஒரு கிறிஸ்தவராக இருந்தார்.

அவள் ஒருநாள் அவரிடம் சென்று, "ஜான், என்னவென்று உமக்குத் தெரியுமா? கர்த்தர் கடந்த இரவு ஒரு சொப்பனத்தில் என்னிடம் பேசி, நீர் வியாபாரம் தொடங்க உமக்கு 10,000 டாலர்கள் பணத்தைக் கடனாக கொடுக்கும்படி என்னிடம் கூறினார்" என்றாள்.

"ஏன்," (அவரால் பேசவே முடியவில்லை), அவர், "சீமாட்டியே, என்னால்-என்னால் பேசக்கூட முடியவில்லை. நான் ஒருபோதும் ஒரு வியாபாரியாக ஆக மாட்டேன்" என்றார்.

அவளோ, "ஆனால் அதைச் செய்யும்படி கர்த்தர் என்னிடம் கூறினார், இதோ காசோலை உள்ளது" என்றாள்.

அவர், "நல்லது, ஆ, நீங்கள் இதைச் செய்ய நான்-நான்-நான் அனுமதிக்கவே மாட்டேன். என்னுடைய... ன் மேல் 10,000 டாலர்கள் பணத்தை வைக்க எனக்கு-எனக்கு விருப்பமில்லை... வேண்டாம், ஹே-உ" என்றார்.

எனவே அவள், "ஆனால் அதை உம்மிடம் கொடுக்கும்படி கர்த்தர் என்னிடம் கூறினார். நீர் ஒரு நல்ல நேர்மையான மனிதர் என்பதை கவனித்து, நீர் வேதாகமத்தை வாசித்துக் கொண்டிருக்கிறதையும் கவனித்தேன். நானும் எனக்கு ஒரு வேதாகமத்தை வாங்கி வாசித்துக் கொண்டிருக்கிறேன். நீர் வியாபாரம் தொடங்கும்படி, உமக்கு 10,000 டாலர்களுக்கான இந்த காசோலையைக் கொடுத்து, உமக்கு இந்தப் பணத்தைக் கடனாகக் கொடுக்கும்படி கர்த்தர் என்னிடம் கூறினார்" என்றாள்.

14. எனவே அவர் காசோலையைப் பெற்றுக் கொண்டார். என்ன செய்வதென்றே அவருக்குத் தெரியவில்லை. எனவே அவர் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார். ஒருநாள் சாயங்கால நேரத்தில், அவர்கள் மேலே நடந்து சென்று, இரண்டாயிரம் டாலர்கள் பெறுமானமுள்ள ஐந்து அறைகள் கொண்ட ஒரு சிறு பழைய வீடு விற்பனைக்கு இருப்பதைக் கண்டார். எனவே அவர் அங்கு சென்று, அந்தக் காசோலையை பணமாக மாற்றி, அதை இரண்டாயிரம் டாலர்களுக்கு வாங்கினார். அவரும் அவருடைய மனைவியும் அங்கே சென்று, அந்த இடத்திலிருந்த

சுண்ணாம்புச்சாந்தை சுரண்டி எடுத்து விட்டு (knock off), அதில் மறுபடியும் அருமையாக சுண்ணச்சாந்து (பூசி) மாற்றியமைக்கத் துவங்கினார்கள், அவரும் அவர் மனைவியும் ஒன்றாக வேலை செய்தனர். அவர் அந்த வீட்டிற்கு சாந்துபூசி (plastered), தரையை ஆயத்தப்படுத்தி, அதன்மேல் விற்பனைக்கு என்ற ஒரு அடையாளத்தையும் வைத்தார். அவர்களுக்கு மூவாயிரம் டாலர்கள் கிடைக்குமானால், அவர்களுக்கு லாபம் கிட்டிவிடும். அவரோ அதை ஆறாயிரம் டாலர்களுக்கு விற்றார்.

இன்றைக்கோ ஜான் ஷாரிட் அவர்கள் ஐந்து லட்சம் டாலர்கள் செல்வத்திற்கு சொந்தக்காரராயிருக்கிறார் (worth). இது தொடங்கி ஏறக்குறைய ஆறு அல்லது ஏழு வருடங்கள் தான் ஆகியிருக்கிறது, அவர் ஐந்து லட்சம் டாலர்கள் மதிப்பு செல்வத்தையுடைய பணக்காரராக இருக்கிறார் (worth). அவர் மூன்று அருமையான சிறு பிள்ளைகளுக்குத் தகப்பனாய் இருக்கிறார். ஓ, என்னே.

அவர், "சகோதரன் பிரன்ஹாமே, நான்... வைத்திருந்தால் என்னவாகியிருக்கும். செய்ய வேண்டுமென்று தேவன் என்னிடம் சொல்லியிருந்ததை ...?... டாக்டர். சுட்டன் அவர்கள் எடுத்துக்கொள்ளாமலிருந்திருந்தால் என்னவாகியிருக்கும். அது என்னவாக இருந்திருக்கிறது என்பதைப் பாரும்?" என்று கூறினார்.

15. மேலும் இப்பொழுது, அவர் அங்கே நின்றுகொண்டு, "கர்த்தாவே, எப்பொழுதாவது நான் உம்முடைய செய்திட்டத்தை நான் காணும்போது, நான்..." என்றார். அப்படியே, அவரிடம் ஏராளமாக பணம் இருந்தது, "நான்... விரும்பவில்லை" என்று கூறினார். அவருக்கு ஆரஞ்சு தோப்புகளும், கால்நடை வளர்ப்புப் பண்ணை வீடுகளும் சொந்தமாக உள்ளன. அங்கே அரிசோனாவிலுள்ள மிகப்பெரிய திறந்தவெளி கால்நடைப்பண்ணைகளில் ஒன்றாகிய பெரிய தண்டர்பேர்ட் கால்நடை வளர்ப்புப் பண்ணை அவருக்கு சொந்தமாக இருக்கிறது.

அவர், "இவைகள் எல்லாம்... நான் இவைகளைக் கொண்டு என்ன செய்வது என்றே தெரியாமல் இருப்பதைக் காட்டிலும் எனக்கு-எனக்கு அதிகமான பணம் இருக்கிறது" என்றார்.

தேவன் அவருக்கு ஒரு அருமையான மகளையும், அதன்பிறகு ஒரு சிறு மகனையும், பிறகு ஒரு சிறு மகளையும் கொடுத்தார். ஆகையால் தான் அவர் இன்றிரவு நம்மோடு இல்லை. அந்தச் சிறு குழந்தை சமீபத்தில் தான் பிறந்தது. அவருடைய மனைவி இந்த வருடங்கள் எல்லாம் மலடாக இருந்தாள். மேலும் இப்பொழுது, அவள் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறாள், அப்படியே...?... செய்து கொண்டிருக்கிறார். ஓ, என்னவொரு சந்தோஷமான குடும்பம்.

அவர், "நான் போனிக்ஸ்-க்கு வரும்போது... ஒரு இரவில் கூட்டத்திற்குச் சென்றேன், கர்த்தாவே, நீர் அதைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தீரே, அந்த இடம் அதுதானா?" என்றார். அப்போது அவர் சொன்னார்... என்னிடம் வந்து, "சகோதரன் பிரன்ஹாமே, நீர் எனக்கு ஒரு பென்னிக்காசும் கடன்பட்டிருக்கவில்லை. ஆனால் என்னால் உம்முடைய தொப்பியை அனுப்ப முடிந்தாலோ, அல்லது உம்முடைய கோட்டை என்னால் கொண்டு வர முடிந்தாலோ, அந்தக் கூட்டத்தில் நான் இருக்க விரும்புகிறேன்" என்றார்.

நான் அவருக்காக ஜெபித்திருந்தேன், தேவன் மறுபடியுமாக அவருடைய பேசும் சக்தியை திரும்ப கொடுத்தார். இப்பொழுது, எல்லா இடங்களிலும் அவருடைய அருமையான வீட்டை உடையவராக சுகமடைந்தும் விட்டார். அவர் தாம் செய்கிற எல்லாவற்றிலுமிருந்தும் கர்த்தருக்கு தசமபாகங்களைச் செலுத்தி வருகிறார். ஓ, என்னே. அவர் அப்படியே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார். எனவே அது இன்னும் அதிகமாக...

16. இப்பொழுது, நீங்கள் அவருக்கு (கடிதம்) எழுத விரும்பினால், வெறுமனே ஜான் B. ஷாரிட், போனிக்ஸ, அரிசோனா என்று எழுதி விடுங்கள். அது அவருக்கு கிடைத்துவிடும். நீங்கள் அந்த சாட்சியை கேட்டுப் பாருங்கள்.

இப்பொழுது, அவர் கைப்பிரதிகளையும் மற்றும் எல்லாவற்றையும் அச்சிட்டு, சவிசேஷத்தை எல்லாவிடங்களிலும் பரப்பிக் கொண்டிருக்கிறார். அவர் அநேகமாக மீண்டும் கூட்டத்திற்கு விரைவில் நம்மோடு இருப்பார்.

வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பதே மிகவும் ஆசீர்வாதமானது. பாருங்கள்?...

மேலும் இப்பொழுது, அது... என்று கூறிக் கொண்டிருக்கவில்லை. என்ன செய்ய வேண்டுமென்று தேவன் உங்களிடம் கூற விடுங்கள். புரிகிறதா? அங்கேயிருக்கும் திருமதி. ஜோன்ஸ் ஒரு விதவைப் பெண் என்றும், அவளுக்கு கொஞ்சம்-கொஞ்சம் துணிகள் தேவை என்றும், நீங்கள் போய், அந்த விதவைக்கு உதவி செய்யும்படியும் தேவன் உங்களிடம் கூறும்போது, போய் அவளுக்கு உதவி செய்யுங்கள். நீங்கள் - நீங்கள் அதைச் செய்யுங்கள். ஏனென்றால் கவனியுங்கள், நண்பர்களே, நம்மிடம் இருக்கும் எல்லா பணமும் ஏதோவொரு நாளில் ஒழிந்து போகும். அது சரியே. அது இனிமேலும் இருக்காது. அது வெறுமனே நித்திய காரியங்களாக இருக்கின்றன. நாம் நம்முடைய ஆத்துமாவுக்குள் கொண்டிருக்கும் காரியங்கள் அவைதான். அது சரிதானா?

நாம் நிர்வாணிகளாக இந்த உலகத்திற்குள் வந்தோம்; நாம் நிர்வாணிகளாகவே உலகத்தை விட்டு போவோம். "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்" என்று யோபு சொன்னது போல. அது சரியே.

17. இப்பொழுது, எல்லாரும் பயபக்தியாயிருங்கள். இப்பொழுது ஜெபத்தில் இருங்கள். அப்பொழுது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் என்று நான் நிச்சயமுடையவனாயிருக்கிறேன்.

நான் இன்றிரவு ஒரு காரியத்தை உங்களிடம் கேட்கப் போகிறேன், எனக்காக நீங்கள் விரும்பினால், நான் சில வேதவாக்கியங்களை வாசிக்கையில். ஒருக்கால் நான் வேதவாக்கியங்களை வாசிக்கும் வரைக்குமாக, நான் காத்துக் கொண்டிருப்பேன். நாம் பரிசுத்த யாக்கோபு 3ம் அதிகாரத்திற்கு -

அல்லது பரிசுத்த யாக்கோபு 2ம் அதிகாரத்திற்கு திருப்புவோம், 21வது வசனம் தொடங்கி (வாசிப்போம்.)

சற்று முன்பு, இந்தப் பட்டணத்தைச் சேர்ந்த ஒரு மனிதரின் பெயரைக் குறித்து கேள்விப்பட்டேன். நான் இந்த ஞாயிறு பிற்பகலில் மற்றும் ஞாயிற்றுக்கிழமையில், இங்கே இருக்கும்படியாக திரும்பி வருவேன் என்றால், அவர் எங்கோவுள்ள ஏதோவொரு பெரிய அரங்கத்தை வாடகைக்குத் தருவதாகக் கூறினார், ஞாயிறு மாலை ஆராதனைகள். மேலும்... இந்த வருகிற ஞாயிற்றுக் கிழமை. எனவே நான் இப்பொழுது ஜெபிக்க வேண்டியிருக்கிறது. நான் என்ன செய்ய வேண்டுமென்று - நான் என்ன செய்ய கர்த்தர் விரும்புகிறார் என்று அவர் வெளிப்படுத்தும்படி நான் விரும்புகிறேன்.

இப்பொழுது, நான் அதைப் பாராட்டுகிறேன், சகோதரனே, நீர் பொருட்படுத்தாமல் விரும்பிக் கொடுப்பதை நான் பாராட்டுகிறேன். தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. வியாதிப்பட்ட ஜனங்களுக்காக உமக்கு அந்தப் பெரிய உள்ளம் இருந்திருக்குமானால், அப்படியே அதேவிதமாகவே உமது ஆசீர்வாதமும் உமக்கு வரும். தேவையிலுள்ளவர்களைக் காணும் போது...

18. இப்பொழுது, பரிசுத்த யாக்கோபு 3வது அதிகா - 2வது அதிகாரம் 21வது வசனம். இது ஏறக்குறைய வேதவாக்கியங்களில் முரண்பாடாக இருப்பது போன்று தோன்றுகிறது. ஆனால் வேதவாக்கியத்தில் முரண்பாடுகள் எதுவும் கிடையாது.

உங்களுக்குத் தெரியும்... வேதவாக்கியம் தன்னில் தானே முரண்படுகிறது என்று ஜனங்கள் கூறுகிறார்கள். அது அப்படியல்ல. பத்து வருடங்களாக, அங்கே என்னுடைய மேடை - என்னுடைய பிரசங்க பீடத்தில் ஒரு சவால் வைக்கப்பட்டிருக்கிறது, தேவனுடைய வார்த்தையின் மூலமாக நேராக்கப்பட முடியாத, தேவனுடைய வார்த்தையில் ஒரு முரண்பாட்டையாவது காண்பிக்கக் கூடிய எந்த நபராவது இருக்கிறார்களா என்று (ஒரு சவால்). அது அவ்வாறு இல்லை. எல்லா வேதவாக்கியமும் கலந்ததாகவே காணப்படுகிறது. அது சரியே. அவை எல்லாமே சிறுசிறு பாகங்களாக பிட்கப்பட்டு

(broke up), இங்கே பொருத்தப்பட்டிக்கிறது. அந்த காரணத்தினால் தான் வேதாகமக் கல்லூரிகளோ, வேதாகமப் பள்ளிகளோ ஒருபோதும் அதை அறிந்துகொள்ள முடியாது. ஞானிகளின் கண்களுக்கும் கல்விமான்களின் (prudent) கண்களுக்கும் அது மறைக்கப்பட்டு கற்றுக்கொள்ள விரும்புகிறவர்களாகிய அப்படிப்பட்ட பாலகருக்கு வெளிப்படுத்தப்படும். நீங்கள்... அது நீங்கள் எவ்வளவு படித்திருக்கிறீர்கள் என்பதல்ல...

19. குறிப்பிட்ட... நான் ...எங்கிருந்து வந்தேனோ அந்த இடத்திலுள்ள மாகாணத்திற்கு அருகில், கென்டக்கியிலுள்ள ஒரு சிறு பையன்.

அன்றொரு நாள் யாரோ ஒருவர் கூறினார், அவர், "சகோதரன் பிரன்ஹாமே, நீங்கள் கென்டக்கியின் எந்த பாகத்திலிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டார். ஓ, என்னே. அது கென்டக்கிக்குப் போகும் வழியாக இருக்கிறது அங்கே அவர்கள்... போகும் வழி (Way down). அங்கே உள்ளே ஒரு சாலை கூட கிடையாது, வெறுமனே அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்கும் ஓடைகளை உடைய படுகைகளால் உண்டான பூமியாகத்தான் (creek bottoms) இருக்கின்றன.

எனவே அவர்களுக்கு ஒரு சிறு பழைய கிராமப்புற பள்ளிக்கூடம் இருந்தது. அவன் ஏறக்குறைய இரண்டாம் வகுப்பு படிக்கும் (second grade) சிறு பையனாக இருந்தான்... அவன் ஒருநாள் அங்கே எழுந்து, "டீச்சர், தேவன் என்னை பிரசங்கம் பண்ண அழைத்தார்" என்று கூறினான்.

ஏன், அவள் அவனைப் பார்த்து சிரித்தாள், தலைமயிர் அவனுடைய முகத்தில் தொங்கிக் கொண்டிருந்தது.

அவன், "கர்த்தர் என்னைப் பிரசங்கம் பண்ண அழைத்திருக்கிறார்" என்றான். அந்தப் பையனுக்கு பதினைந்து, பதினாறு வயதிருக்கும் என்று நினைக்கிறேன். மேலும் சொன்னான்...

ஏன், அந்த ஆசிரியர், "நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். அதைக் குறித்து மறந்து விடு" என்றாள்.

நல்லது, அவன் பள்ளியின் முதல்வரிடம் போனான். மேலும் ஓ, அவர்களால் அவனைப் பிரசங்கம் பண்ண விட முடியவில்லை.

ஆனால் ஒருசில மாதங்கள் கழித்து, தம்முடைய பெயருக்கு ஏதோவொரு மகத்தான D.D. பட்டத்தை உடையவராயிருந்த ஏதோவொரு பெரிய ஊழியக்காரர் அதனூடாக வந்தார். எனவே அந்தப் பள்ளியைக் கொண்டிருக்கலாம் என்று அவர்கள் அவருக்கு அனுமதி கொடுத்திருந்தார்கள். எனவே அவர் இரண்டு வார கூட்டங்களில் பிரசங்கித்தும், ஒருபோதும் ஒரு மனமாற்றமும் இல்லாதிருந்தது.

20. இந்நிலையில், அந்தப்பையனுடைய தகப்பனார் அந்தப் பையன் உண்மையாகவே அழைக்கப்பட்டிருந்ததாக எண்ணினார். எனவே அவர் பள்ளி முதல்வரிடம் சென்று, "நீர் பிரசங்கம் பண்ண அவரை அனுமதித்திருப்பீரானால், நீர் ஏன் என்னுடைய மகன் ஒருமுறை முயற்சி செய்துபார்க்க அனுமதிக்கக் கூடாது?" என்று கேட்டார்.

எனவே அவர்கள் அங்கே இறங்கிச் சென்றார்கள், அவன் பிரசங்கம் செய்ய அவர் அனுமதி கொடுத்தார். அவர்கள் எல்லாரும்... அந்த இரவில் இந்தப் பையன் பேசுவதைக் கேட்க எல்லாரும் வெளியே வந்தார்கள். அவன் அங்கே எழுந்து நின்றான், அவனால் வேதாகமத்தை வாசிக்கவே முடியாதிருந்தது. எனவே அவனுக்காக வேதாகமத்தை வாசிக்கும்படி செய்ய யாரோ ஒருவரை அவர்கள் பெற வேண்டியதாயிருந்தது. அவன் பிரசங்கம் பண்ணச் சென்றான்.

எனவே அவன் பிரசங்கம் பண்ண போன போது, தன்னைத்தானே குறிப்பிடும்படியானவராக அழைத்துக்கொண்ட (self-styled) அந்தச் சிறு ஆசிரியரும், அவரோடு கூட வேறு ஏறக்குறைய ஐம்பது பேர்களும் பீடத்தண்டையில் தங்களைக் கண்டடைந்து, அழுதுகொண்டே இயேசுவிடம் தங்களுடைய

வழியில் வந்தார்கள். பாருங்கள்? அது சரியே. அங்கே தேசத்தின் அப்பாகத்தில் ஒரு உண்மையான எழுப்புதல் வெடித்து கிளம்பிற்று (broke out). உண்மையாகவே நூற்றுக்கணக்கானவர்கள் கிறிஸ்துவிடம் வந்தார்கள்.

ஏன்? அதற்கு பெரிய படிப்பு அவசியமில்லை. இயேசு கிறிஸ்துவிடம் முழுவதும் அர்ப்பணித்த ஒரு இருதயம் தான் அதற்குத் தேவையாக உள்ளது. நீங்கள் எவ்வளவு படிப்பறிவில்லாதவர்களாக இருந்தாலும் பரவாயில்லை... "பேதையாக இருந்தாலும், திசைகெட்டுப் போவதில்லை..." அது சரிதானா?

21. எனவே இப்பொழுது, வார்த்தையை வாசிக்கையில், கூர்ந்து கவனியுங்கள்.

**நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்?**

**விசுவாசம் அவனுடைய கிரியைகளோடே கூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே.**

**அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று; அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்.**

**ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலேமாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே.**

**அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்?**

**அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.**

22. இப்பொழுது, முதலாவது காரியம் என்னவென்றால்... ஆபிரகாம் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுகிறான் என்பதாக பவுல் ரோமர் 4ம் அதிகாரத்தில் பேசுவது போன்று தோன்றுகிறது; யாக்கோபு கிரியைகளினாலே அவனை நீதிமான் என்று கூறுகிறான். ஆனால் அது முரண்படுவதில்லை. தேவன் ஆபிரகாமில் என்ன கண்டார் என்பதை பவுல் பேசிக் கொண்டிருந்தான், மனிதன் ஆபிரகாமில் என்ன கண்டான் என்பதை யாக்கோபு பேசிக் கொண்டிருந்தான்.

ஆபிரகாம் சாராளின் மூலமாக இந்தப் பிள்ளையைக் கொண்டிருக்கப் போகிறான் என்பதை தேவன் அவனிடம் கூறினபோது, தேவன் ஆதியாகமம் 6ம் அதிகாரத்தில் ஆபிரகாமில் என்ன கண்டார் என்பதை பவுல் பேசிக் கொண்டிருந்தான். ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. அவன் வாக்குத்தத்தத்தை விசுவாசித்தான். அதுதான் தேவன் கண்டது.

அதன்பிறகு ஆபிரகாம் ஈசாக்கை செலுத்தின இடமாகிய, அதியாகமம் 22ல் மனிதன் என்ன கண்டான் என்பதைத் தான் யாக்கோபு பேசிக் கொண்டிருக்கிறான், அதைத் தான் அவன் பேசிக் கொண்டிருந்தான்.

பாருங்கள், விசுவாசம் என்பது என்ன... உங்களிடம் இருக்கிற விசுவாசம் எத்தகையது, அதைத் தான் தேவன் காண்கிறார். ஆனால் உங்களுடைய கிரியைகள் என்னவென்பது, அதைத் தான் உங்கள் அண்டை வீட்டார்கள் பார்க்கிறார்கள். புரிகிறதா? உங்களுடைய விசுவாசத்தினாலே - உங்கள் விசுவாசம் இல்லாமல் உங்கள் கிரியைகளை எனக்குக் காட்டுங்கள், நான் என்னுடைய விசுவாசத்தினாலே என்னுடைய கிரியைகளை உங்களுக்குக் காட்டுவேன். பாருங்கள்?

கவனியுங்கள், இங்கே கேட்டுக் கொண்டிருக்கும் இந்தக் கூட்டத்தாரிடத்தில் விசுவாசம் உண்டென்று நம்புகிறேன். நான் அதை விசுவாசிக்கிறேன். ஆனால் நீங்கள் அதைக் கிரியைகளின் அதைக் கட்டவிழ்த்து விட (turn loose) பயப்படுகிறீர்கள். நீங்கள் உங்களுடைய விசுவாசத்தைக் கட்டவிழ்த்து விட்டிருந்தீர்களேயாகில்... நான்-நான் நம்புகிறேன். பாருங்கள்?

23. இப்பொழுது, நான் அறிந்துள்ளவரையில், எனக்கு இன்னும் இரண்டு இரவுகள் உள்ளன. கடந்த இரவில், இன்றிரவிலும் கூட என்னால் கூடியமட்டும் மிகச்சிறந்த முறையில், அவ்வளவு நெருக்கமாக அடக்கிவைக்கவே முயற்சித்துக் கொண்டிருக்கிறேன், மிகக்கடினமாக கடுமுயற்சிசெய்வதிலிருந்து விலகியிருக்கவே முயற்சிக்கிறேன். அதன்பிறகு கடந்த இரண்டு இரவுகளில், தேவன் எனக்கு ஒத்தாசை செய்வாராகில், என்னுடைய முழு இருதயத்தையும் நான் பெற்றிருக்கிற எல்லாவற்றையும் ஆராதனையில் பிரயோகிக்கப் போகிறேன்...?...

ஆனால் நான் பேசிக் கொண்டிருக்கையில், நான் உங்களிடம் இதைக் கொண்டு வர விரும்புகிறேன். எனென்றால் அநேகமாக நாளை இரவு மற்றும் அடுத்த இரவில், நான் எதையும் கூறக்கூட விரும்புவதில்லை, வெறுமனே ஜெபவரிசையைக் கொண்டிருப்பது, ஆயத்தமாகி, மேடைக்கு வந்து, வியாதியஸ்தருக்காக ஜெபிக்கச் செல்லுதல்.

ஆனால் அன்புள்ள நண்பர்களே, நீங்கள் இதைச் செய்வீர்களேயானால், நீங்கள் தேவனுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுப்பீர்களானால்... இப்பொழுது, நீங்கள் விசுவாசியுங்கள். நீங்கள் விசுவாசித்தால், "ஆம்" என்று கூறும்படிக் கேட்கிறேன். அது சரிதானா? நீங்கள் விசுவாசித்திருந்தால், "ஆம்" என்று கூறியிருப்பீர்கள்.

அப்படியானால், நீங்கள் விசுவாசித்தால், நீங்கள் விசுவாசிப்பது போன்று நடந்து கொள்ள வேண்டும். அது சரியல்லவா? நீங்கள் விசுவாசிப்பது போன்று நடந்து கொள்ள வேண்டும்.

24. இப்பொழுது, கவனியுங்கள். உங்களால் விசுவாசிக்க முடிந்தால்... கூறுங்கள், உதாரணமாக, நான் ஒரு பாவியாக பீடத்தண்டையில் இருந்தேன்... இப்பொழுது, நீங்கள் எப்பொழுதாவது தேவனிடமிருந்து எதையாகிலும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே வழி விசுவாசத்தின் மூலமாகத்தான். உங்கள் எல்லாருக்கும் அது புரிகிறதா? முழு கிறிஸ்தவ ஆயுதவர்க்கமும் விசுவாசமாகத்தான் இருக்கிறது: அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, நற்குணம், பொறுமை, தயவு, அடக்கம், காணக்கூடாத எல்லாமே, கிறிஸ்தவர்களாகிய நாம், நாம் எதைக் காண்கிறோமோ அதைப் பார்ப்பதில்லை; நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதையே காண்கிறோம். நான் என்ன கூறவருகிறேன் என்று புரிகிறதா? அங்கே எந்த இயற்கையான ஆதாரமும் இருப்பதற்கு முன்பே நாம் அதை விசுவாசிக்கிறோம்.

கன்னி மரியாள், தேவ தூதன் அவளைச் சந்தித்து, "மரியாளே, வாழ்க, ஸ்திரீகள் மத்தியில் நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்..." என்று கூறி, அவள் கன்னிகையாயிருந்து, அவள் எந்த மனிதனையும் அறியாமலே ஒரு பிள்ளையைப் பெறப்போகிறாள் என்பதை அவளிடம் கூறத் தொடங்கின போது, அவள் தூதனின் வார்த்தையை ஏற்றுக்கொண்டாள். அவள் இயற்கையான எந்த ஆதாரமும் இருப்பதற்கு முன்பே, ஒரு மனிதனை அறியாமல் அவள் ஒரு குழந்தையைக் கொண்டிருக்கப் போகிறாள் என்று அவள் சாட்சி கூறவும், ஜனங்களிடம் சொல்லவும் தொடங்கினாள். அவள் அப்படியே அதை விசுவாசித்தாள். அவள் எதை விசுவாசித்தாளோ அதன்பேரில் செயல்பட்டாள். இப்பொழுது, சுகமடைய நீங்கள் செய்ய வேண்டியது அதுதான்.

25. இப்பொழுது, ரோசெஸ்டரில், மேயோ சகோதரர்களிடத்தில் (Mayo Brother's) இருந்த போது, ஒரு வரத்தின் மூலமாக என்ன செய்ய வேண்டுமென்று என்னிடம் கூறக்கூடிய யாருமே அங்கேயில்லாதிருந்தது, அவர்கள் என்னைப் பார்த்தபோது, அவர்கள் உலகத்திலேயே மிகச்சிறந்த மருத்துவர்கள், அவர்கள், "உமக்கு எந்தவிதமான வாய்ப்பு கூட கிடையாது" என்று கூறிவிட்டனர். பாருங்கள்?

ஆனால் ஒரு வேதவாக்கியம், அது எபிரெயர் 3:1... நான் அதைக் கண்டேன். அவர் நம்மடைய அறிக்கையின் பேரில் பிரதான ஆசாரியராயிருக்கிறார். அவர் செய்திருக்கிறார் என்று நான் அறிக்கை செய்யும் எதற்காகவும் நன்மை செய்யும்படியாக அவர் பிதாவானவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆனால் அவர் அதைச் செய்துவிட்டார் என்று நாம் அறிக்கையிட்டு, அதன்பேரில் நாம் செயல்படும் மட்டுமாக அவரால் நமக்காக எதையும் செய்ய முடியாது. புரிகிறதா? நீங்கள்... "நீங்கள் விரும்புகிற காரியங்கள் எதுவாக இருந்தாலும்..." "நீங்கள் விரும்புகிற எதுவாக இருந்தாலும், நீங்கள் ஜெபம் பண்ணும்போது, நீங்கள் அதைப் பெற்றுக்கொள்கிறீர்கள் என்று விசுவாசியுங்கள்" என்று இயேசு பேசுகிறார். அதுதான் ஒழுங்காக இருக்கிறது. பாருங்கள்? நீங்கள் அதைப் பெற்றுக்கொள்கிறீர்கள் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அது உங்களுக்குக் கொடுக்கப்படும். அது...?... உங்களுடைய அறிக்கையினிமித்தமாக பரிந்துபேசும்படிக்கு அவர் பிரதான ஆசாரியராக இருக்கிறார். அவர் இருக்கிறார் என்று நீங்கள் முதலில் அறிக்கை செய்யும் மட்டுமாக அவரால் உங்களைச் சுகப்படுத்த முடியாது. [ஒலிநாடாவில் காலியிடம் - ஆசிரியர்.]

26. ...?... அவர் உங்களை இரட்சிக்க முடியுமா. நீங்கள் எவ்வளவு அழுதாலும் பரவாயில்லை... நீங்கள் பீடத்தண்டை வந்து, அழுது, உங்கள் தலைமயிரைப் பிய்த்து, கதறி, "தேவனே, தேவனே, மனமிரங்கும்" என்று கூறலாம். நான் பழமை நாகரீகமான மனந்திரும்புதலில் விசுவாசம் உள்ளவன்.

ஆனால் வருடத்திற்குப் பின் வருடமாக அநேக வருடங்கள் மட்டுமாக, நீங்கள் அங்கேயே தங்கியிருந்து, மனந்திரும்ப முடிந்தாலும், அவர் உங்களை இரட்சித்து விட்டார் என்று நீங்கள் உங்கள் இருதயத்தில் விசுவாசித்து, எழுந்து, அதை அறிக்கை செய்யும் மட்டுமாக நீங்கள் ஒருக்காலும் இரட்சிக்கப்படவே மாட்டீர்கள். மனுஷருக்கு முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவனை நானும், என் பிதாவிற்கு முன்பாகவும், பரிசுத்த

தூதர்களுக்கு முன்பாகவும் அறிக்கை பண்ணுவேன். அது உண்மை தானா?

இப்பொழுது, பாருங்கள், விசுவாசத்தினாலும், உங்கள் அறிக்கையினாலும் மட்டுமே நீங்கள் இரட்சிக்கப்பட முடியாது. அது சரிதானா?

இப்பொழுது, அவர் மரித்த எதற்காகவும் நன்மையானதைச் செய்வார். இங்கே அவர், "என்னுடைய சுகத்திற்காக அவர் மரித்தாரா?" அப்பொழுது நான் தேவனை ஏற்றுக்கொள்வேன். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமத்தினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். அவர்...

27. அவருடைய ஊழியத்தில் எண்பது சதவீதம் தெய்வீக சுகமளித்தல் தான். அவருடைய ஊழியத்தில் எண்பது சதவீதம் அற்புதமான பக்கத்தில் இருந்தது தான், இயற்கைக்கு மேற்பட்ட தேவன் மனித சரீரத்தில் கிரியை செய்து கொண்டிருந்ததை ஜனங்களுக்கு காண்பிப்பதாக அது இருந்தது.

என்னுடைய சகோதரனே, சகோதரியே, நான் இதை பயபக்தியோடு கூறுவேனாக. அதைத்தான் சரியாக, அவர் இப்பொழுதும் இந்தக் கூடாரத்திலும் செய்து கொண்டு, ஜனங்களிடம் வர முயற்சித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் அவர் இன்றிரவு, இந்த வஸ்திரங்களை உடுத்தினவராய், இங்கே நின்று கொண்டிருந்தால், தொடர்ந்து இரவுக்குப் பின் இரவாக அவர் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாரோ அதைக் காட்டிலும் எந்த அதிகமான காரியத்தையும் உங்களுக்காக அவரால் செய்ய முடிந்திருக்காது. அது சரிதானா? அவரால் முடிந்திருக்காது... நீங்கள் யாரென்றும் - என்னவென்றும், நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்றும், உங்களிடம் என்ன தவறு இருக்கிறது என்றும் அவரால் உங்களிடம் கூற முடிந்திருக்கும். ஆனால் நீங்கள் அதை விசுவாசிக்கும் மட்டுமாக அவரால் உங்களைச் சுகப்படுத்த முடிந்திருக்காது. நீங்கள் அதை விசுவாசித்திருக்கும் போது, பிதாவானவர் அதை அவருக்கு வெளிப்படுத்தியிருப்பார்,

அப்போது அவர், "உன் வழியே போ; உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றும், அதைப் போன்ற மற்றவைகளையும் உங்களிடம் கூறியிருப்பார். அவருடைய ஊழியத்தில் அவர் அந்தவிதமாக நடந்துகொண்டாரா?

28. அவருடைய புனிதமான உதடுகளிலிருந்து வந்து கொண்டிருந்த அவருடைய சொந்த வார்த்தைகளைக் கவனியுங்கள். அவர், "பிதாவானவர் செய்ய குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி வேறொன்றையும் குமாரன் தாமாக செய்ய மாட்டார் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார். பிதாவானவர் குமாரன் அறியும்படி செய்வதாக அது இருக்கிறது, பிதாவானவர் என்ன கூறுகிறாரோ அதையே குமாரனும் பேசுகிறார்.

நல்லது அப்படியானால், அவர் இங்கே நின்றுகொண்டு, நீங்கள் தேவனை உங்கள் சுகமளிப்பவராக ஏற்றுக்கொண்டிருப்பீர்களானால், நீங்கள் சுகமடைந்திருப்பீர்கள், அப்போது குமாரன் அதை உங்களுக்கு வெளிப்படுத்தியிருப்பார், உங்கள் பாவங்கள் போய்விடும். உங்கள் சுகம் சரியாகவே இருக்கிறது.

இப்பொழுது, தேவனுடைய குமாரன் இன்னுமாக, அவருடைய கருவியாகிய, மனிதகுலத்தினூடாக, எவ்வாறு கிரியை செய்து கொண்டிருக்கிறார் என்பது அப்படியே சரியாக இல்லையா? ஓ, கேட்டுக்கொண்டிருக்கும் கூட்டத்தினரே, நான் இதை உங்களிடம் கொண்டுவர முடியும்படியான வார்த்தைகளை என்னால் கொண்டிருக்க முடியும்படி எவ்வளவாய் விரும்புகிறேன். ஆனால் அது...?... ஜனங்களை இழுத்து, உலகத்தில் உங்களுக்காக எதையாவது செய்வது. இருப்பினும், சரியாக உங்களுக்கு என்ன தேவையாயிருக்கிறது என்றும், நீங்கள் என்ன விரும்புகிறீர்கள் என்றும், என்னால் எப்படி அதை உங்களிடம் கொண்டுவர முடியும் என்பதையும் நான் அறிவேனா? பாருங்கள்?

29. என்னால் முடிந்து (ஓ, என்னே.), நான் இங்கே நின்றுகொண்டு, அவர்கள் இலேசாக... என்னால் ஒவ்வொருவருக்கும் கொடுக்க முடிந்து, அவர்கள் எல்லாரும்

சுகமடையும்படியான சிறிய குளிகைகள் (capsules) என்னிடம் கொஞ்சம் இருந்திருக்குமானால். கிரியை செய்யும்படியாக, அந்த குளிகைகளை எடுத்து, என்னுடைய மூக்குடன் கூட அவைகளில் ஒன்றை எடுக்க வேண்டியிருந்து, இங்கிருந்து கொலம்பஸ், ஓஹியோவுக்கு தள்ளத் துவங்கி, சாலையினூடாக, தெருவின் வழியாக என்னுடைய மூக்கோடு கூட தள்ள வேண்டியிருக்குமானால், நான் அறிவேன்; நான் கொலம்பஸ் - ஐ அடையும்போது, அது ஜனங்களாகிய உங்களை சுகப்படுத்தும் என்பதை அறிந்திருந்து, எனக்கு எந்த மூக்கும் மீதியாக இருக்காது என்றும் நான் அறிந்திருந்தால், இன்றிரவே துவங்கியிருப்பேன். அது சரியே. இப்பொழுது, நான் உண்மையைத் தான் கூறுகிறேனா அல்லது இல்லையா என்று தேவனுக்குத் தெரியும். அப்படியானால், தெருவில் துவங்கி, இந்த ஜனக்கூட்டம் சுகமடைய முடியும் என்பதை அறியும்படிக்கு, அந்தக் காரியத்தை என்னுடைய மூக்கோடு அதை தள்ளி வைத்திருந்திருப்பேன்.

நான்... பிதாவானவர் மகிமைப்படும்படியாகவே நான் விரும்புகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் மகிமைப்படும்படி நான் எவ்வளவாய் விரும்புகிறேன். முழு உலகமும் அவரை நோக்கிப்பார்க்கவே நான் விரும்புகிறேன். அவர்கள் அப்படியே அவரை நோக்கிப் பார்த்திருப்பார்களானால்... இப்பொழுது, நீங்கள் சுகமடைய விரும்புவதைக் காட்டிலும், இந்தக் கூடாரத்தில் இருக்கும் ஒவ்வொரு நபரும் சுகமடைய அவர் இன்னும் அதிகமாக விரும்புகிறார். அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.

30. "இப்பொழுது, அப்படியானால் நாம் எவ்வாறு சுகமடைவது, சகோதரன் பிரன்ஹாமே?" முதலாவது காரியம் என்னவென்றால், உங்களால் சுகமடைய முடியாது... நீங்கள் அப்படியே உங்களைத்தானே... ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள். நான்...?... நீங்கள் சுகமடைந்து விட்டீர்கள் என்று நீங்கள் உங்கள் இருதயத்தில் விசுவாசிக்கும் மட்டுமாக.

ஏனென்றால் இப்பொழுது, ஞாபகம் கொள்ளுங்கள், உங்களால் சாத்தானோடு விளையாட முடியாது. நீங்கள் விசுவாசிக்கிறீர்களா

இல்லையா என்று அவனுக்குத் தெரியும். ஒரு குறிப்பிட்ட விதத்தில் அதை பாவனைகாட்ட முயற்சிக்க வேண்டாம். நீங்கள் உண்மையாகவே விசுவாசியுங்கள். இப்பொழுது, சிந்தித்துப் பாருங்கள், நண்பர்களே, தேவனோடு கூட அலுவலில் ஈடுபட நீங்கள் முழங்காற்படியிடுங்கள்? அப்பொழுது, உங்களோடு அலுவலில் ஈடுபட அவர் வருவார்.

ஓ, நாம் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எவ்வளவாக நான்...?... பாருங்கள், அப்படியானால் விசுவாசத்தினாலே, இப்பொழுது நீங்கள் பார்க்கிறீர்கள். அவர் உங்களுடைய அறிக்கையைக் குறித்து பிரதான ஆசாரியனாக இருக்கிறார். நீங்கள் எதன்மூலமாக இரட்சிக்கப்பட்டீர்களோ, அதே தகுதியின் மூலமாகவே நீங்கள் சுகமடைகிறீர்கள். அது சரிதானா? இப்பொழுது, உங்களுடைய சொந்த தகுதியில் நம்பிக்கை வைக்க வேண்டாம்; இரட்சிக்கப்பட உங்களால் செய்யக்கூடியது அங்கே எதுவுமே கிடையாது, அவரிடத்தில் வைக்கிற விசுவாசம் மட்டுமே.

என்னுடைய நீதியில் என்னால் பரலோகத்துக்குப் போக முடியாது. உங்களுடைய நீதியிலும் உங்களால் அங்கே போக முடியாது. தேவன் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார். ஆனால் அவர் தம்முடைய குமாரனுடைய நீதியை ஏற்றுக்கொள்வார். வேதவாக்கியம் கூறுகிற பிரகாரமாக, நாம் அவர் பேரில் விசுவாசம் வைத்து, அவர் இருக்கிறார் என்று விசுவாசித்து, அவரை அறிக்கை செய்வீர்களானால், அவர் நீதியாக நமக்குள்ளே கிரியை செய்வார்.

31. ஒரு பாவி வந்து பெற்றுக்கொள்வான் என்றால் - இன்றிரவு வெளியே போய், "நல்லது, நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன்" என்று கூறுவான் என்றால்...?... அவர்கள்... நீங்கள் எப்போதும் பார்ப்பது போலவே பார்க்கிறீர்கள். நீங்கள் அதே நபர் தான். நல்லது, நீங்கள், "நல்லது, ஒருக்கால் நான் அதைப் பெற்றிருக்கவில்லை. ஒருக்கால் நான் பெற்றுக்கொண்டதாக நினைத்து விட்டேன்" என்று கூறுவீர்களானால். அப்பொழுது ஒரு பன்றி சேற்றில் புரளப் போவது போலவும், ஒரு நாய் தான் கக்கினதற்குப் போவது போலவும், நீங்கள் நேராக உங்கள்

பாவத்துக்கே திரும்பிப் போய் விடுவீர்கள். ஆனால் நீங்கள்...க்கு நீங்கள் விருப்பமாயிருக்கும் வரையில்...

ஒரு பன்றியை சேற்றில் புரளுவதிலிருந்து நீங்கள் எடுப்பதை உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகிறதா... நீங்கள் ஒரு பன்றியை எடுத்து, இந்தப் பன்றியை உள்ளே கொண்டு வந்து, சோப் பவுடர் தயாரிக்க பயன்படும் ரசாயனத்தைக் (sal-soda) கொண்டு அல்லது நீங்கள் விரும்பும் எதுவாக இருந்தாலும் அதைக்கொண்டு, அதை சோப் மற்றும் தண்ணீரினால் மிக நன்றாக தேய்த்துக் கழுவி, பெண்கள் தங்கள் விரல்களுக்கு வர்ணம் தீட்டுவதுபோல் அதனுடைய கால் நகங்கள் மேல் வர்ணம்தீட்டி, ஆடைகளை அதற்கு உடுத்தி, ஆயத்தப்படுத்தி, அதை ஒரு வன்மர தரையில் வைத்து, காலை உணவாக அதற்கு நவதானியத்தைக் (grape-nuts) கொடுத்துப் பாருங்கள், அப்பொழுது அந்த பன்றி செத்துவிடும். நீங்கள் அதை எடுத்து, அதைக் கட்டவிழ்த்து விட்டுப் பாருங்கள், நீங்கள் அதைத் தேய்த்துக் கழுவி பளபளப்பாக்கியிருந்த போதிலும், அது நேராக அந்த புரளுமிடத்திற்கே சென்று, அதனிடம் அதுவால் போக முடியும் போது, மீண்டுமாக அந்தச் சேற்றிலேயே புரண்டு கொண்டிருக்கும். [ஒலிநாடாவில் காலியிடம் - ஆசிரியர்.] ஏன்? ஏன்? ஒரு பன்றியின் சுபாவம்...?... அங்கே அதற்குள்ளே இருக்கும் பன்றியின் சுபாவம்...

ஆனால் ஒரு ஆட்டுக்குட்டியை அங்கே வெளியே, புரளும் சேற்றில் வைத்துப்பாருங்கள், யாராவது ஒருவர் அதை அங்கிருந்து வெளியே எடுக்கும் மட்டுமாக, அது கத்திக்கொண்டும், அழுதுகொண்டும் இருக்கும். இப்பொழுது, நீங்கள் ஒரு பன்றியை அந்த சேற்றை விட்டு வெளியே வைக்க விரும்பினால், அந்தப் பன்றியின் சுபாவத்தை மாற்றுங்கள். பாவியை உலக காரியங்களை விட்டு வெளியே வைப்பதும் அந்தவிதமாகத்தான், அவனை ஒரு பாவியின் சுபாவத்திலிருந்து ஒரு கிறிஸ்தவனின் சுபாவத்துக்கு மாற்றுவது தான். அந்த மகத்தான வல்லமையான கிரியையின் மூலமாக மட்டுமே அது செய்யப்பட முடியும். விபச்சாரிகள் மாற்றமடைவதையும் நான்

கண்டிருக்கிறேன். [இரட்டிப்பாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒலிநாடாவில் காலியிடம் - ஆசிரியர்.]

32. சிலசமயங்களில்... நாம் எப்பொழுதும் கொண்டிருந்ததிலேயே இது முதலாவது கூடாரமாக இருக்கிறது. ஒரு பெரிய அரங்கத்தில், அது வழக்கமாக பைத்தியக்காரர்களுக்கான இடத்தை உடையதாயிருக்கிறது. நான் உங்களுக்கு ஒரு சிறு கதையைக் கூறுகிறேன்...?...

சமீபத்தில், அங்கே படுத்து, அழுதுகொண்டும், தங்கள் தலைகளை மோதிக்கொண்டும், மற்றும் பலமாகக் கத்திக்கொண்டும் மற்றும் எல்லாவற்றையும் செய்துகொண்டும் இருந்த ஏறக்குறைய பதினைந்து பைத்தியம் பிடித்தவர்கள் இருக்கும் ஒரு அறைக்குள் நடந்து சென்றேன்...?... அங்கே உள்ளே சென்றேன். நாங்கள் கதவை அடைக்கையில், நான் நோக்கிப் பார்த்தேன், அங்கே ஒரு அருமையாக தோற்றமளித்த ஒரு வாலிப பெண் இருந்தாள். எந்த மனிதனுக்கும் அது ஒரு பதுமையாக இருப்பது போன்று காணப்பட்டது.

நான், "எப்படியிருக்கிறாய்?" என்றேன்.

அவள், "சகோதரன் பிரன்ஹாமே, எப்படியிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

நான் கீழே நோக்கிப் பார்த்து, நான், "எது, உங்கள் நோயாளி எங்கே?" என்று கேட்டேன்.

அவள், "நான் ஒரு நோயாளி" என்றாள்.

"ஒரு நோயாளியா?" நான் அவளை நோக்கிப் பார்த்தேன். சரியாக எதையும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை, எனவே நான் உட்கார்ந்து அவளிடம் பேசலாம் என்று எண்ணினேன்.

அவள், "நீர் ஒருவிதத்தில் திடுக்கிட்டு விட்டீரா?" என்று கேட்டாள்.

அதற்கு நான், "ஆமாம், பெருமாட்டியே...?... இங்கேயிருக்கும் இந்த ஜனங்களோடா" என்றேன்.

அவள், “நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, நான் என்னுடைய கதையை உம்மிடம் கூற விரும்புகிறேன்” என்றாள்.

நான், “சரி” என்றேன்.

33. அவள்-அவள் பேசத் துவங்கினாள். அவள், “நான் ஒரு சிறு பிள்ளையாக இருந்த போது...?... ஆனால் நான் ஒருமுறை ஒருகூட்ட சிறு பெண்களோடு வெளியே சென்று, புகைபிடித்தேன். அவர்கள் என்னை புகைக்கச் செய்தார்கள், மற்றும் என்னைக் குடிக்கவும் பண்ணினார்கள். அவர்கள் ஒருகூட்ட பையன்களோடு வெளியே போவார்கள். நான் ஒரு முழு நேர குடிகாரியாக ஆகிவிட்டேன். நான் மிகவும் குடிப்பவளாக இருந்தேன். நான் குடிக்கவும், புகைப்பிடிக்கவும் தொடங்கினபோது, நான் தெருவில் இருக்கும் விபச்சாரியாகத் தொடங்கினேன்,” என்றாள், அவள் தன்னுடைய வாழ்க்கையின் ஒழுக்கங்களை விற்றுக்கொண்டிருந்தாள். அவள், “அவர்கள் என்னைத் தூக்கி, என்னை நல்ல மேய்ப்பன் இல்லத்தில் வைத்தார்கள். நான் அங்கே உள்ளே அந்த பிரசங்கத்தைக் கேட்டபோது... நிச்சயமாக, நான் அங்கே உள்ளே இருந்தபோது, நான் சரியானதையே செய்ய வேண்டியிருந்தது. நான் வெளியே வந்தபோது, நான் நேராக மறுபடியும் அதற்குத் திரும்பிப் போய் விட்டேன்” என்று கூறினாள்.

“அதன்பிறகு, சட்டம் என்னைப் பிடித்து, பெண்களுக்கான சிறைச்சாலையில் இரண்டு வருடங்கள் அடைத்தார்கள். அதன்பிறகு நான் மறுபடியும் வெளியே வந்தேன். அவர்கள் எனக்கு... ஆலோசனை கூறினார்கள். நான் சபைக்கு, வித்தியாசமான சபைக்குப் போக வேண்டும் என்று சில ஜனங்கள் கூறினார்கள், நான் இந்த புரட்டஸ்டன்ட் சபைக்கு வர வேண்டுமென்று புரட்டஸ்டன்ட் ஜனங்கள் என்னிடம் கூறினார்கள். நானும் போனேன். நான் சென்று, அந்த புரட்டஸ்டன்ட் சபையை சேர்ந்து கொண்டேன்” என்றாள். அவள் அந்தச் சபையின் பெயரைக் கூறினாள் (called). மேலும் அவள், “நான் சரியாக வெளியே திரும்பிச் சென்று, நான் எப்பொழுதும் கொண்டிருந்த

அதே வாஞ்சைகளையே கொண்டிருந்தேன். நான் முயற்சித்து பார்த்தேன். ஜெபித்துப் பார்த்தேன். அழுதுப் பார்த்தேன், சகோதரன் பிரன்ஹாமே. எப்படி என்று எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் செய்து பார்த்து, யாராவது என்னிடம் எப்பொழுதுதாவது கூறின எல்லாவற்றையும் முயற்சித்துப் பார்த்து விட்டேன்" என்றாள். ஆனால் அவள், "என்னால் இதைச் செய்வதை விட்டுவிட முடியவில்லை (can't keep from)" என்று கூறினாள்.

34. நான், "இதோ பார், சகோதரியே" என்றேன். தவறு என்ன என்பதை நான் உணரத் தொடங்கினேன். நான், "அதைச் செய்ய உனக்கு விருப்பமில்லை. நீ இருக்கிற வண்ணமாக, ஒரு அழகான பெண்ணாக, ஏதோவொரு நாளில் நீ விவாகம் செய்ய வேண்டுமென்றும், உண்மையான எல்லா பெண்களுக்கும் இருப்பது போன்று, ஒரு கணவனையும் குழந்தைகளையும் கொண்டிருக்க வேண்டும் என்று நீ எதிர்ப்பார்க்கிறாய்" என்றேன்.

அதற்கு அவள், "ஆம், ஐயா" என்றாள்.

நான், "உன்னால் அவ்வாறு இருக்க முடியவில்லை. உனக்கு நீயே பரிதாபகரமாக இருக்கிறாய் என்றும், உன்னுடைய பிள்ளைகளுக்கும் நீ அவமானமாக இருக்கிறாய் என்றும் உனக்குத் தெரியும், மேலும், ஓ, நான்... நீ இருக்க விரும்புவது எல்லாம் அதுதான்" என்றேன்.

அதற்கு அவள், "அது சரியே" என்றாள்.

நான், "அதைச் செய்ய உனக்கு விருப்பமில்லை, அப்படித்தானே, சகோதரியே?" என்றேன்.

அவள், "இல்லை, ஐயா" என்றாள்.

நான், "நீ அதைச் செய்யும்படி வைக்கிற ஏதோவொன்று அங்கேயிருக்கிறது, அங்கே அது இல்லையா?" என்றேன்.

அவள், "ஆமாம், ஐயா" என்றாள்.

நான், "ஓ, அது பழமை நாகரீகமாகத் தோன்றலாம், அது உன்மேல் இருக்கிற பிசாசாக இருக்கிறது, சகோதரியே. இப்பொழுது, உன்னுடைய மருத்துவர் அதை நம்ப விரும்பாமல் இருக்கலாம், மற்றுவர்களும் நம்ப விரும்பாமல் இருக்கலாம். ஆனால் அது உன்னை செய்ய வைக்கிற பிசாசாக இருக்கிறது... உன்னுடைய விருப்பத்திற்கு மாறாக அதைச் செய்யும்படி அது பலவந்தப்படுத்துகிறது" என்றேன்.

அவள், "அது சரி. அது தான் சரி என்று நான் எப்போதுமே நினைத்தேன்" என்றாள்.

35. நான், "இப்பொழுது, பார், நீ கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்து, ஜெபிப்பாய் என்றால், தேவன்..." என்றேன்.

அவள், "நான் அதைச் செய்துவிட்டேன், சகோதரனே" என்றாள்.

நான், "நீ எதைச் செய்திருக்கிறாய் என்பதைக் குறித்து நான் பேசிக் கொண்டிருக்கவில்லை. இப்பொழுது நான் கூற வருவது. செய்யும்படி நான் உனக்குச் சொல்லுவதின்படி நீ செய், அப்பொழுது நீ அதிலிருந்து விடுதலை அடைவாய்" என்றேன்.

அவள், "நல்லது, நீர் என்னை விடுவிக்க முடியுமா?" என்று கேட்டாள்.

நான், "இல்லை, பெருமாட்டியே. இயேசு கிறிஸ்து மாத்திரமே உன்னை விடுவிக்க முடியும்" என்றேன்.

அவள், "நல்லது, என்னுடைய வாழ்க்கையைக் கொடுக்கும்படி, நான் ஏற்கனவே அவரிடம் வந்திருக்கிறேனே" என்றாள்.

நான், "சகோதரியே, கொஞ்சம் பொறு. நீ... நான் உனக்கு சொல்வதின்படி செய்ய. நீ செய்வாயா?" என்றேன். அவள் சொன்னாள்... நான், "நாம் இப்பொழுது ஜெபிப்போம்" என்றேன்.

நாங்கள் முழங்கால்படியிட்டு ஜெபம் பண்ணினோம். அவள் அழுது கொண்டிருந்தாள். ஒரு சில நிமிடங்கள் அவள் எழுந்து நின்றாள். அவள், "ஆனால், சகோதரன் பிரன்ஹாமே, நான்-நான்-

நான்-நான் இன்றிரவு வெளியே போகப் போகிறேன். நான்-நான் என்னால் சிறந்ததை முயற்சிக்கப் போகிறேன்" என்றாள்.

நான், "வேண்டாம். நீ மறுபடியும் நேராக பழைய நிலைக்கே போய்விடுவாய்" என்றேன். (பாருங்கள்?) நான், "அது முடிந்துபோகவில்லை" என்றேன்.

அவள், "ஆனால் நான்... எவ்வாறு செய்வது என்று எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் நான் செய்திருக்கிறேன்" என்றாள்.

நான், "ஆனால் இன்னுமாக அதுவல்ல, சகோதரியே. உன்னிடமிருந்து அந்த சுபாவத்தை இழுத்து, உன்னை மாற்றும்படி ஏதோவொன்று இருந்தாக வேண்டும்" என்றேன்.

அவள் சொன்னாள் - அவள், "நல்லது, நான் ஜெபித்தேன். நான் அழுதிருக்கிறேன்" என்று கூறிவிட்டு, அழுதுகொண்டே, வெளியே போகத் தொடங்கினாள்.

36. எனவே நான் அவளோடு ஜெபிக்க முழங்கால்படியிட்டு, அந்தப் பிசாசு அவளைக் கட்டவிழ்த்து விடுதலை செய்யும்படி (turn her loose) செய்ய தேவனிடம் வேண்டினேன். நான் அவ்வாறு ஜெபித்து, அவள் மேல் கரங்களை வைக்கையில், ஒருசில கண நேரங்களாக, அமைதியாக அவளுடைய தலையை அங்கே தாழ்த்தி வைத்திருந்தேன். அப்போது நேரடியாக, மகத்தான பெரிய வெல்வெட் கண்களோடு அவள் திரும்பி என்னைப் பார்த்தாள். அவள், "சகோதரன் பிரன்ஹாமே, எனக்கு ஏதோவொன்று நடந்து விட்டது" என்றாள்.

நான், "இப்பொழுது, அது முடிந்து விட்டது" என்றேன். அது சரியே. "இப்பொழுது, அது முடிந்து விட்டது."

அவள், "நான் அப்படியே உணருகிறேன்... நல்லது, எனக்குத் தெரியவில்லை" என்றாள்.

நான், "சரியாக இப்பொழுது உன்னை நிலைக்குலைய வைக்க போதுமான பிசாசுகள் அங்கேயில்லை, நீ இப்பொழுது போகிறது போல, அப்படியே தொடர்ந்து போய்க்கொண்டேயிருப்பாயானால்"

என்றேன். அது ஒரு வருடத்திற்கும் மேலாக, அதற்கு முன்பு நடந்தது. இன்றிரவு அந்தப் பெண்ணுக்கு விவாகமாகி, அருமையான குடும்பத்தை உடையவளாயிருக்கிறாள், அந்த நேர முதற்கொண்டு ஒருபோதும் அவள் குடிக்கவில்லை, அல்லது குடிக்க வேண்டுமென்ற எந்த வாஞ்சையோ, அல்லது புகைப்பிடிக்க வேண்டுமென்ற வாஞ்சையோ, அல்லது எதற்குமே எந்த வாஞ்சையுமில்லை. அது என்னவாக இருந்தது? அது அவள் எடுத்துக்கொண்ட எந்த மருந்தும் அல்ல. ஆனால் இயேசு கிறிஸ்துவின் வல்லமையின்மூலமாக, அவளுடைய ஆத்துமாவை மாற்றுகிற இயற்கைக்கு மேம்பட்ட தெய்வீக வல்லமையின் மூலமாகவே, அவரே அவளை எடுத்து, அந்த எல்லா வாஞ்சையையும் எல்லா அக்கிரமத்தையும் அவளை விட்டு எடுத்துப்போட்டு விட்டார். அவள் இன்றிரவு மரிப்பாளானால், அவளுடைய ஆத்துமா மற்ற எவரையும் போல, அமைதியாகவே இருக்கிறது. அது சரியே.

நல்லது, அவள் வாழும்படிக்கு தன்னுடைய விவாகத்தில் வெளியே வந்து, அவளை மீட்டுக்கொண்ட கர்த்தராகிய இயேசுவை விவாகம் செய்துகொண்டாள்.

37. கவனியுங்கள். அமெரிக்க கீழ்நிலை நீதிமன்றங்களில், அவள் ஒரு கதாபாத்திரமாக இருந்தாள்...?... பதிவேடுகளிலும் மற்றும் எல்லாவற்றிலும், அவள் ஒரு பெண் குற்றவாளியாக இருந்தாள். இப்பொழுது, கவனியுங்கள். ஆனால் இன்றிரவோ, அவள் ஒரு அருமையான பெண்ணாகவும், ஒரு தாயாகவும், தேவனால் இரட்சிக்கப்பட்ட ஒரு நல்ல கிறிஸ்தவனுக்கு அவள் அடங்கியிருக்கிறவளாகவும் (settled down) இருக்கிறாள். என்னவொரு வித்தியாசம்? அதைச் செய்தது எது? அங்கே எல்லாமே, அங்கே சட்டம் தோற்றுவிட்டது, திருத்துதலின் இல்லம் எங்கே தோற்றுவிட்டது? மருத்துவ விஞ்ஞானமும் எங்கே தோற்றுவிட்டது? இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தான் தூக்கி எடுத்தது, அது தோற்றுப்போகவே முடியாது.

ஏன்? விசுவாசத்தினாலே. ஏன், அது ஒரு விபச்சாரியை ஒரு பரிசுத்தவாட்டியாக மாற்றுவதும், ஒரு குடிகாரியை ஒரு-ஒரு

நீதியுள்ள பெண்மணியாக மாற்றுவதுமான தேவனுடைய வல்லமையாக இருக்கிறது... ஏன் அது, எந்த புற்று நோயையும், எந்த செவிடையும், எந்த ஊமையையும், எந்தக் குருடையும், எந்த முடத்தையும் எடுத்துப் போடுகிற அதே வல்லமையினாலே தான்... உங்கள் சுகமளித்தலுக்காகவும், உங்கள் இரட்சிப்புக்காகவும் பிராயச்சித்தம் செய்த அதே மனிதரிடமிருந்து, அதே நாளில், அதே இரத்தம். அது உண்மை தானா? உங்களுடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார்; அவருடைய தழும்புகளால் குணமாகிறீர்கள். சரியாக அதே நாளில், அதே மனிதரிடமிருந்து ஓடின அந்த இரத்தம் தான். அது சரிதானா?

அது எப்படி செய்யப்பட்டது... நீங்கள் அதை எவ்வாறு பெற்றுக்கொள்கிறீர்கள்? நீங்கள் சிந்திக்கிற காரணத்தினால் அல்ல, ஆனால் அதற்குக் காரணம் நீங்கள் - நீங்கள் அதைப் பெற்றுக்கொண்டீர்கள் என்று நீங்கள் அறியும்படியாக உங்கள் மேல் வருகிற ஏதோவொன்றின் நிமித்தமாகத்தான்.

38. இதோ பாருங்கள், நண்பர்களே. நான் இந்த விளக்கத்தைக் கூறட்டும். நான் முன்னரே இதைச் செய்திருக்கலாம். அந்த சட்டை எந்த நிறத்தில் உள்ளது? அது வெள்ளை நிறம். பார்வையிருக்கும் யாரும் அந்த சட்டை வெள்ளை நிறத்தில் இருக்கிறது என்பதை அறிவார்கள். சரீரத்தில் உங்களுக்கு ஐந்து புலன்கள் உண்டு: பார்த்தல், ருசித்தல், உணருதல், நுகருதல், கேட்டல். இப்பொழுது, அந்தப் புலன்களில் எதுவும் தேவனை அறிவிக்காது. தேவன் மனிதனை உண்டாக்கினபோது, அவர் அவனை மனிதனுடைய சாயலுக்குப் பதிலாக தம்முடைய சாயலில் உண்டாக்கினார். பூமிக்குரிய வீட்டோடு தொடர்பு கொள்ளும்படிக்கு அவர் அவனை புலன்களுக்குள் வைத்தார், தேவனோடு தொடர்புகொள்ள அல்ல. அந்தப் புலன்கள் தேவனை அறிவிக்காது. அவை பூமிக்குரிய வீட்டையே அறிவிக்கின்றன, அங்கு தான் மனிதன் தன்னுடைய பூமிக்குரிய வீட்டோடு தொடர்பு கொள்ள வேண்டியிருந்தது. அவன் பார்க்கவும், ருசிக்கவும், உணரவும், நுகரவும், கேட்கவும் வேண்டியிருந்தது.

ஆனால் விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. நீங்கள் பார்க்கவோ, ருசிக்கவோ, உணரவோ, நுகரவோ, அல்லது அதைக் கேட்கவோ செய்வதில்லை: ஆனால் நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்கள். நான் என்ன கூறவருகிறேன் என்று புரிகிறதா?

இப்பொழுது, இங்கே உள்ளேயிருக்கும் ஒவ்வொரு நபரும்... இங்கேயிருக்கும் இந்தப் பையனோ, இங்கேயிருக்கும் இந்த சீமாட்டியோ, சிறிய- இங்கேயிருக்கும் இந்த வாலிப பெண்ணோ... நான் முடமாக இருப்பவர்களிடம் தான் பேசிக் கொண்டிருக்கிறேன், நிச்சயமாக, மேலும் இங்கும் அங்குமாக, வியாதிப்பட்டிருக்கும் ஜனங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறேன், நீங்கள் சுகமடைந்து விட்டீர்கள் என்று நீங்கள் மிகவும் நிச்சயமாக இருக்கும் வரையில், நீங்கள் விசுவாசித்து, சரியாக இப்பொழுதே ஜெபம் பண்ணுவீர்களானால், அது வெள்ளை நிறத்தில் இருக்கிறது என்று நீங்கள் எவ்வளவு நிச்சயமாக சொல்லுகிறீர்களோ, அவ்வளவு நிச்சயமாக, அது முடிந்து விட்டது.

நான் உங்களுக்கு உறுதியாகக் கூறுவேன், நீங்கள் அம்மாதிரியான விசுவாசத்தைப் பெற்றிருப்பீர்களானால், சர்வவல்லமையுள்ள தேவன் என் மூலமாகப் பேசி, நீங்கள் சுகமடைந்து விட்டீர்கள் என்று உங்களுக்குக் கூறி, அதை வெளிப்படுத்துவார். புரிகிறதா நண்பர்களே?

39. ஆகையால் (நீங்கள் பாருங்கள்?), நான் அதை என்னிடமிருந்தே தள்ளுகிறேன். அது நானல்ல. நான் வெறுமனே ஒரு... என்னால் மாத்திரம் மூச்சு விட முடியாமல் இருந்தால்... தேவன் இல்லாமல் உங்களால் மூச்சுவிடவும் முடியாது, உங்களால் முடியுமா? உங்கள் ஆவி உங்களை விட்டுப் போய் விடட்டும், அப்பொழுது நீங்கள் போய் விட்டீர்கள். அது சரிதானா? தேவன் உங்கள் ஜீவனை தம்முடைய கரங்களில் பிடித்திருக்கிறார். அது உண்மை தானா? நீங்கள் உங்களாகவே ஜீவனுனுள்ளவர்களாக ஆக்கிக்கொள்ள முடியாது. நீங்கள் தேவன் மூலமாகவே ஜீவிக்கிறீர்கள்.

தேவன் ஏதோவொன்றைக் கூறும் மட்டுமாக என்னால் எதையும் கூற முடியாது என்பதும் அதேவிதமாக இருக்கிறது. அதற்கான எந்த அதிகாரமும் எனக்குக் கிடையாது. அவர் அதைக் கூறுகிறார். அவர் அதைக் கூறும்போது, அப்படியானால் அது உண்மையாக இருக்கிறது. அது உண்மை. தேவன் அடையாளங்களைக் கொண்டும், அற்புதங்களைக் கொண்டும் அதை உறுதிப்படுத்துகிறார். விசுவாசம் கொண்டிருங்கள். உங்கள் விசுவாசத்தை கிறிஸ்துவில் வையுங்கள்.

இப்பொழுது, நீங்கள்... உங்களுக்காக ஜெபிக்கும்படி இங்கே மேலே மேடைக்கு நான் சங்கை மார்க்ஹாம் அவர்களையோ, அல்லது இந்த ஊழியக்காரர்களில் ஒருவரையோ அழைப்பேன் என்றால், அது பரவாயில்லை... அது உங்களுடைய விசுவாசத்தின்படியாகவும், உங்களைப் பொறுத்ததாகவும் இருக்கிறது.

40. அந்த ஊழியருக்கு ஜெபிக்க அவ்வளவு அதிக உரிமை உண்டு, அல்லது மற்ற எந்த ஊழியக்காரர்களுக்கும் உரிமை உண்டு, ஒரு ஊழியருக்கு மட்டுமே உரிமை உண்டு என்பது அல்ல, ஆனால் ஒரு விசுவாசியாயிருக்கிற எந்த கிறிஸ்தவனுக்கும் விசுவாசத்தோடு ஜெபிக்கவும், விசுவாச ஜெபத்தை ஏறெடுக்கவும் உரிமை உண்டு... வியாதியஸ்தருக்காக ஜெபம் பண்ணுவதில் விசுவாசமுள்ள எவரும், தெய்வீக சுகமளித்தலில் விசுவாசமுள்ள எவருக்கும் உரிமை உண்டு: ஸ்திரீயோ, மனிதனோ, பையனோ, சிறு பெண்பிள்ளையோ, யாருக்கும் அதற்கு உரிமை உண்டு. மூன்று வயது மாத்திரமே ஆன என்னுடைய சிறு மகள், சப்பாணியாக இருந்த ஒரு பிள்ளைக்காக ஜெபித்து, அதுவும் சுகமடைந்ததை நான் கண்டிருக்கிறேன். அது சரியே. அவளுடைய சிறிய இருதயம் அடிக்கத் தொங்கி, அவள், “அப்பா, அதைப் பாருங்கள், அந்தச் சிறுமியை” என்றாள்.

நான், “தேனே, அவளுக்காக ஜெபி” என்றேன். அதிலிருந்து ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்களில், அந்தப் பிள்ளை சுகமடைந்து விட்டது, அந்தப்பிள்ளை. விசுவாசிக்கும் யாருடைய கூக்குரலையும் தேவன் கேட்கிறார். விசுவாசிக்கும்படி நீங்கள்

மற்றவர்களைக் கேட்டுக்கொள்வதன் காரணம் என்னவென்றால், அந்த சந்தேகத்தின் வல்லமையை அகற்றும்படிக்கு, உங்கள் விசுவாசத்தை நீங்கள் ஒன்றாக சேர்த்துக்கொள்கிறீர்கள்.

எப்பொழுதாவது செய்யப்பட்ட முதலாவது பாவம் என்னவென்றால், அது தேவனுடைய வார்த்தையைச் சந்தேகித்தது தான். அது சரிதானா? தேவன், "அதை நீ புசிக்கும் நாளில், சாவாய்" என்று சொன்னார்.

சாத்தானோ, "நிச்சயமாக நீ சாக மாட்டாய்" என்றான். ஏவாள் தேவனுடைய வார்த்தையைச் சந்தேகித்து, அறிவைத் தேட போகும்படி அவன் செய்தான். அது சரிதானா?

41. இன்றைக்கு, முழு உலகமும்... நான் கல்விக்கு விரோதமானவன் அல்ல. ஆனால், உலகமானது, அவர்கள் ஒரு கல்வித் திட்டத்தைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அதை சபைக்குள்ளும் பெற்றிருக்கிறார்கள். மேடைகளிலிருந்து, ஒரு ஊழியக்காரர் ஒரு குறிப்பிட்ட பட்டத்தை அல்லது ஏதோவொன்றை கொண்டிருக்க வேண்டியிருக்கிறது, அல்லது அவரால் முடியாது - அல்லது அவரால் முடியாது அவர் மேடைக்கு வரவேற்கப்பட மாட்டார். என்னுடைய கென்டக்கி வார்த்தைகளாகிய: "hain't," "tis," மற்றும் "carry," மற்றும் "fetch," களை உபயோகிக்கிற என்னை நீங்கள் இந்த உயர் குல சபைகளில் சிலவற்றிக்குள் அனுமதித்துப் பாருங்கள்... அவர்கள் என்னை உதைத்து வெளியே தள்ளி விடுவார்கள்.

நல்லது பாருங்கள், சகோதரனே, தேவனுடைய இராஜ்யம் கல்வியின் மூலமாக வராது (அது சரியே.), தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு இருதயத்தின் மூலமாகவே வருகிறது. நான் என்னுடைய அறியாமையை காப்பாற்ற முயற்சித்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால் நான் இதைக் கூறிக் கொண்டிருக்கிறேன், என் அன்பு நண்பர்களே, எளிய சிறுபிள்ளை விசுவாசம்... அறிவைத் தேடாதீர்கள்.

இப்பொழுது, நான் ஒரு...?... என்று நினைக்கிறீர்கள், அல்லது அதை மருத்துவர்கள் மேல் எறிகிறீர்கள். மருத்துவர்களிடத்தில்

எனக்கு நம்பிக்கை உண்டு. மருத்துவமனைகளிலும், மருத்துவக்கல்லூரிகளிலும் (institutions) எனக்கு நம்பிக்க உண்டு. யாருக்காவது உதவியாக இருக்கக் கூடிய எதுவாக இருந்தாலும், தேவனே, இன்னும் அதிகமாக (அவைகளை) அனுப்பும்.

ஆனால் அவைகளில் ஒன்றும் எப்பொழுதாவது யாரையும் சுகப்படுத்தினதில்லை. அவர்கள் அவ்வாறு ஒப்புக்கொள்ள மாட்டார்கள் - யாரையும் சுகப்படுத்துவதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் இயற்கைக்கு உதவி செய்வதாகவே அவர்கள் உரிமைகோருகிறார்கள். தேவனே சுகமளிப்பவர்.

42. ஒரு சில இரவுக்கு முன்பு, நான் உங்களிடம் கூறினபடி, நான் என்னுடைய கையில் ஒரு இடத்தை வெட்டுவேன் என்றால், உலகத்திலுள்ள எல்லா மருந்துகளும் அந்த கரத்தை சுகப்படுத்தவே செய்யாது. நான் மரித்து, அவர்கள் என்னை நறுமணமூட்டிப் பாதுகாத்து வைத்திருந்திருந்தார்களானால், அந்தக் கைக்கு தையல் இட்டு, எல்லாவித மருந்துகளையும் அதன்மேல் போட்டுப் பாருங்கள், இன்றைய தினத்திலிருந்து ஐம்பது வருடங்கள் கழித்தும், அது இன்னுமாக அங்கேயே தான் இருக்கும்.

மருந்து குணமாக்குவதில்லை. நீங்கள் அந்த ஜீவனை அங்கிருந்து வெளியே எடுத்து விட்டால், அங்கே எந்த சுகமளித்தலுமே இல்லை. ஜீவன் தான் சுகமளிக்கிறது. ஜீவன் தேவனாக இருக்கிறார். நீங்கள் பரிபூரண ஜீவனைக் கொண்டிருக்கும்படிக்கே இயேசு வந்தார், விசுவாசத்தினாலே சுகமடையும்படிக்கு அவரை விசுவாசிக்க, உங்கள் இயல்பான ஜீவன் எவ்வாறு இருக்கிறதோ அதைக் காட்டிலும் அதிகமான ஜீவனைக் கொண்டிருக்கும்படியாகவே அவர் வந்தார்.

இப்பொழுது, நான் உணர்ச்சிவசப்படவில்லை (excited). ஆனால் நான் என்ன பேசிக் கொண்டிருக்கிறேன் என்பதை அறிந்திருக்கிறேன். இந்த... தேவனுடைய எந்த வாக்குத்தத்தத்திற்காகவும் உள்ள சரியான மனப்பான்மையானது அதை சம்பவிக்கப்பண்ணும். அங்கே தான் அது இருக்கிறது.

“இங்கே நீர் எதற்காக வரங்களைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறீர்?” என்று கேட்கலாம்.

வரங்கள் பக்திவிருத்திக்காக உள்ளன. அவைகள் கூடுதலாக கொடுக்கப்படுகின்றன. தெய்வீக சுகமளித்தலுக்கும் அல்லது தேவனிடமிருந்து கிடைக்கும் எதற்கும் முதலாவது மற்றும் அடிப்படையானது இதோ இருக்கிறது, அதுதான் வேதாகமம் ஆகும். நீங்கள் அதை விட்டு விலகிப் போய் விடுவீர்களானால்,. நீங்கள் தேவனுடைய சித்தத்திற்கு வெளியே இருக்கிறீர்கள்.

43. தெய்வீக சுகமளித்தலானது ஒரு வஞ்சனையான (hocus-pocus) காரியம் அல்ல. அது யாரோ ஒருவரின் மேல் ஒருசில மர்மமான வார்த்தைகளைக் கூறி, மனோவசியம் செய்வது (hypnotizing) அல்ல. இயேசு கிறிஸ்து மூலமாக வெளிப்படுத்தப்பட்ட சத்தியம் தான் தெய்வீக சுகமளித்தலாக இருக்கிறது. அது சரியே. ஆவியின் வரங்கள் பக்திவிருத்தியடையும்படிக்குக் கொண்டுவரப்பட்டன. அல்லது வேறு வார்த்தைகளில் கூறினால், அது கட்டிடத்தில் மேலே பறக்கிற ஒரு கொடியாக உள்ளது. மழையை விட்டு வெளியே (வரும்படி) ஜனங்களை கவர்ந்து இழுக்கும்படியாக வெளியிலுள்ள தோற்றமாக இருக்கிறது. நான் என்ன கூற வருகிறேன் என்று புரிகிறதா?

இப்பொழுது, வரங்கள் தேவனிடமிருந்து தான் வருகின்றன. அவைகள் தேவனிடமிருந்து வருமானால், அவை தேவனைக் குறித்தே சாட்சி கொடுக்கும். தேவன் அவைகளைக் குறித்து சாட்சி கொடுப்பார். அது உண்மை தானா?

நீங்கள் வியாதியாயிருந்தால், நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடு விசுவாசிக்கும் மட்டுமாக ஜெபம் பண்ணுங்கள்... நீங்கள் அதைப் பெற்றுக்கொள்ளப் போகிறீர்கள் என்று நீங்கள் வெறுமனே அறிந்திருக்கிற ஏதோவொன்றிற்காக நீங்கள் எப்பொழுதாவது ஜெபித்திருக்கிறீர்களா? அது தான் விசுவாசமாக இருக்கிறது. புரிகிறதா?

44. இப்பொழுது, நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிப்பீர்களானால், அதை ஏற்றுக்கொண்டு, அதன்பேரில் செயல்படுங்கள். இப்பொழுது, நீங்கள் விரும்புகிற அளவு அதிகமாக உங்களால் விசுவாசிக்க முடியும்; நீங்கள் அதன்பேரில் செயல்படவில்லை என்றால், ஒரு பாவி...?... போன்றே நீங்கள் சரியாக அங்கேயே இருப்பீர்கள். பீடம். நீங்கள் அங்கே முழங்கால்படியிட்டு, ஜெபித்து, ஜெபித்திருந்தீர்களானால். நீங்கள், "கர்த்தாவே, நீர் என்னை இரட்சித்து விட்டீர் என்று அறிவேன். ஆனால் அது-அது ஒரு... நீர் சொல்லியிருக்கிறீர் என்பது எனக்குத் தெரியும்..." என்று சொன்னீர்கள். அவன் எழும்படி, அதை அறிக்கைசெய்து, அதனோடு கூட தரித்திருந்து, அதனோடு கிரியைகளைக் காண்பிக்கும் மட்டுமாக அவர் அதனூடாக ஒருபோதும் வரவே மாட்டார்.

யாக்கோபு, "ஆவியில்லாத சரீரம் செத்தது போல, கிரியைகள் இல்லாத விசுவாசமும் செத்ததாக இருக்கிறது" என்று கூறுகிறான், நீங்கள் எவ்வளவு விசுவாசித்தாலும், அது ஒரு பொருட்டேயல்ல.

அந்த காரணத்தினால் தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன், நண்பர்களே, தேவனுடைய பிரசன்னத்தை உங்களுக்கு உண்மையுள்ளதாகச் செய்யவே இந்த வரங்கள் உள்ளே கொண்டுவரப்பட்டன. (ஏறக்குறைய பெருஞ்சத்தத்தினால் காதடைக்கும் அளவுக்கு நான் பேசிக் கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன்.) தேவனுடைய பிரசன்னத்தை உங்களுக்கு உண்மையுள்ளதாகச் செய்யவே வரங்கள் கொண்டு வரப்பட்டன. அப்போது உங்களுடைய விசுவாசம் மேலே தேவனை நோக்கி பார்த்து, தெய்வீக சுகமளித்தலையோ, அல்லது இரட்சிப்பையோ, அல்லது தேவனிடமிருந்து உங்களுக்கு தேவைப்படும் என்னவாக இருந்தாலும் அதையோ ஏற்றுக்கொள்கிறது. அது ஒரு காரியம் அல்லது வேறொரு காரியத்தை மட்டும் செய்வதல்ல. இந்த பூமிக்குரிய பிரயாணத்தில் எங்களுக்குத் தேவையான எதுவும், அது உங்களுக்குத் தேவைப்படுமானால், தேவன் அதை கொடுப்பார். உங்களுடைய தேவைகளை அவர் அருளுவதாக அவர் வாக்குப்பண்ணியிருக்கிறார், நீங்கள் விரும்புவதையல்ல,

உங்களுக்கு தேவையானதை அருளுவதாகவே அவர் வாக்குப்பண்ணியுள்ளார். அவர் தேவனாக இருக்கிறார். நீங்கள் அவரை விசுவாசிக்கிற வண்ணமாகவே, அவரால் அதை உங்களிடம் கொண்டுவர முடியும். அவர் இங்கேயிருக்கிறார் என்று உங்களை உணரும்படி செய்யவே வரங்கள் இருக்கின்றன. ஒருவருக்கான அவருடைய மனப்பான்மையே எல்லாருக்குமான அவருடைய மனப்பான்மையாக இருக்கிறது. ஆமென்.

45. ஓ, என்னே. நண்பர்களே, நான்-நான்... நான் மிகவும் விசித்திரமான வகைப்பட்ட ஒரு நபர் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் என்னுடைய இருதயத்திலுள்ள விசுவாசத்தை எடுத்து, அதைச் சரியாக இப்பொழுதே உங்களுக்கு பரவச்செய்ய என்னால் முடியும்படிக்கே விரும்புகிறேன். நான் என்ன கூற வருகிறேன் என்று புரிகிறதா? இங்கே இந்தக் கட்டிடத்திலுள்ள ஒவ்வொரு நபருக்கும் சுயமாகவே ஏதோவொன்று சம்பவிக்கும்...

நீங்கள், "நல்லது இப்பொழுது, சகோதரன் பிரன்ஹாமே, என்னால் என்னுடைய கரத்தை அசைக்க முடியுமா அல்லது முடியாதா என்று தெரியவில்லை" என்று கூறலாம். நீங்கள் அவ்வாறு நினைப்பது வரையில், உங்களால் ஒருபோதும் அதை அசைக்க முடியாது. அவர் அதைச் செய்துவிட்டார் என்று விசுவாசித்து, அவர் அதைச் செய்து விட்டார் என்று போய்ச் சொல்லி, அவர் அதைச் செய்து விட்டது போன்று நடந்துகொள்ளுங்கள். அதை ஒரு அங்குலம் அசைத்துப் பாருங்கள். உங்களால் அதை அசைக்க முடியாவிட்டால், நாம் அது எல்லாவற்றையும் எடுத்துவிட்டு, கொஞ்ச தூரம் அசைப்போம். அடுத்த நாள் சற்று தூரமாக அதை அசைப்போம். அடுத்தநாள் சற்று தூரமாக அசைப்போம். சாத்தான், "உன்னால் அவ்வளவு தூரம் தான் போக முடியும்" என்று சொன்னான்.

"ஓ, இல்லை, நான் தொடர்ந்து போய்க்கொண்டேயிருக்கிறேன்" என்று கூறுங்கள். அதனோடு தொடர்ந்து போய்க்கொண்டேயிருங்கள். அதனோடு தரித்திருங்கள்.

மகத்தான விசுவாசம் சரியாக இப்பொழுதே உங்களைக் கொண்டுவரும். நீங்கள் சிறிய விசுவாசத்தில் தரித்திருப்பீர்களானால், சிறிய விசுவாசம் எப்படியும் உங்களைத் தொடர்ந்து கொண்டுவரும். நீங்கள் வெறுமனே ஒளிக்கதிரைக் காணும்போது, அதைப் பின்தொடருங்கள். அதனோடு தரித்திருங்கள்; அது உங்களை வெளியே கொண்டு வரும். ஓ, என்னே.

46. இப்பொழுது, இயேசு தம்மைத்தாமே அடையாளத்தை நிருபிக்க முடியுமானால். அவர் தம்முடைய பிதாவைத் தவிர தம்மைத்தாமே அடையாளம் கண்டு கொள்ளவில்லை. "... கிரியைகளைச் செய்கிற பிதாவானவர்."

இப்பொழுது, பிலிப்பு வந்தபோது, பிலிப்புவுக்கும், நாத்தான்வேலுக்கும் ஜனங்களுக்கும், கழுதைகள் எங்கே கட்டப்பட்டிருந்தன என்றும் மீனின் வாயில் பணம் எங்கேயிருந்தது என்றும் காண்பித்தார்.

இப்பொழுது, அவர், "நான் செய்கிற காரியங்கள், இவைகளைப் பார்க்கிலும் அதிகமான காரியங்களையும் நீங்கள் செய்வீர்கள். நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், நான் செய்கிறவைகளை நீங்களும் செய்வீர்கள், இவைகளிலும் இன்னும் அதிகமாகச் செய்வீர்கள். ஆனால் நான் மறுபடியும் வந்து, உங்களோடும், உங்களுக்குள்ளும் கூட இருப்பேன்" என்றார்.

47. ஒரு ஓவியனுடைய ஆவி நமக்குள் இருந்திருந்தால், நாம் ஒரு ஓவியனைப் போன்று ஒரு படத்தை ஓவியம்தீட்ட நம்மால் முடிந்திருக்கும். ஒரு கொள்ளைக்கூட்டத்தானின் ஆவி எனக்குள் இருந்திருக்குமென்றால், நாம் துப்பாக்கிகளை வைத்திருப்போம். கிறிஸ்துவின் ஆவி நமக்குள்ளே இருந்திருந்தால், நாம் நம்முடைய இழிகுணத்தை கைவிட்டு, கிறிஸ்துவைப் போன்று இருப்போம்; அவரைப் போன்று நாம் நடந்துகொள்வோம். அப்படியானால் அந்த ஆவி அங்கே உள்ளே இருக்குமென்றால், நாம்... கொண்டிருப்போம். கிறிஸ்துவிடம் இருந்த அந்தக் காரியங்கள், அவைகளை நாமும் கூட உடையவர்களாக இருப்போம். நான் என்ன கூற வருகிறேன் என்று புரிகிறதா?

ஆனால் நீங்கள் உங்களைத்தானே (அவ்வாறு) ஆக்கிக்கொள்ள முடியாது. நீங்கள் விசுவாசித்தாக வேண்டும். அங்கே தான் நீங்கள்-நீங்கள் செய்து கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன், நண்பர்களே. என்னைக் கவனியுங்கள். அங்கேதான் தவறு இருக்கிறது. நீங்கள் முயற்சிக்கிறீர்கள்... இங்கே அதற்குள்ளே உங்களைத்தானே பிரயத்தனம் பண்ணி அதை ஆக்கிக்கொள்ள முயற்சிக்கிறீர்கள். அதைச் செய்வதற்குப் பதிலாக, சிறு பிள்ளைகளுக்கு இருப்பது போன்ற விசுவாசத்தை (childlike faith) உடையவர்களாய் அமர்ந்திருங்கள், அப்பொழுது தேவன் உங்களை... உயர்த்துவார். "அவர் எனக்கு வாக்குத்தத்தம் பண்ணியுள்ளார். சரியாக இப்பொழுதே அதை விசுவாசிக்க எனக்கு விசுவாசத்தை கொடும். அவர் அந்த விசுவாசத்தை விழவிடும்போது, அவன் வெளியே போய்விடுகிறான்; இதை ஏற்றுக்கொள்ளும், பிதாவே." எழுந்து நில்லுங்கள், அது முடிந்து விட்டது. அது அவ்வளவு எளிதாக உள்ளது, நண்பர்களே. நீங்கள் கவனமாக இருக்க வேண்டும், பயபக்தியாகவும் இருக்க வேண்டும், தேவனை உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்க வேண்டும்.

இப்பொழுது, இந்த வரங்கள், அடையாளங்கள், அற்புதங்கள், தேவனுடைய பிரசன்னத்தை உங்களிடம் கொண்டு வருகிறது. இப்பொழுது, இன்றிரவு உங்கள் முழு இருதயங்களோடும் விசுவாசியுங்கள். அப்பொழுது தேவன் நிச்சயமாகவே... நண்பர்களே. அதை விசுவாசிக்கிறீர்களா?

48. நாம் நம்முடைய தலைகளை வணங்குவோமாக. எங்கள் பரலோகப் பிதாவே, ஓ இயேசுவே, நான் நீண்ட நேரம் பேசிவிட்டேன். ஜனங்கள் உம்மைக் காண வேண்டுமென்று நான் நான் விரும்பினேன், கர்த்தாவே, எங்களுக்கு விசுவாசத்தைக் கொண்டுவர, எங்களை மீட்டுக்கொள்ள நீர் எப்படியாக மரித்திருக்கிறீர்...?... இன்றிரவு உம்முடைய ஆசீர்வாதங்களை எங்களுக்கு கொடுத்தருளும், கர்த்தாவே. இன்றிரவு உமது ஜனங்களை சுகப்படுத்தும். அநேகர் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களில் சிலர் விசுவாசம் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களில் சிலருக்கு விசுவாசம் இருந்தும்,

அதனோடு கிரியை செய்ய பயப்படுகிறார்கள், கர்த்தாவே. அவர்களுடைய விசுவாசம் தாமே இன்றிரவு கட்டவிழ்க்கப்படுவதாக (turned loose). நாங்கள் வீட்டிற்குப் போகையில், நாங்கள் தாமே களிகூர்ந்துகொண்டும், சந்தோஷத்தோடும், சுகமடைந்தவர்களாகவும் போவோமாக, தேவ குமாரனாகிய இயேசுவின் மூலமாக, நான் இதற்காக வேண்டிக்கொள்கிறேன். ஆமென்.

இப்பொழுது சற்று பொறுங்கள். அவர்கள் ஜெப வரிசையை அழைக்கப் போகையில், ஹூஸ்டன், டெக்ஸாஸில் உள்ள ஒரு சிறிய மனிதர் சமீபத்தில் இந்த மேடையினூடாகக் கடந்து சென்றார். அவர்... நாங்கள் ஒரு (ஜெப) வரிசையைக் கொண்டிருந்தோம், நாம் கடந்த இரவில் செய்தது போன்று, அதனூடாக வந்து கொண்டிருந்து, "தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக" என்று கூறி, ஒரு சிறு ஜெபத்தைக் கொண்டிருந்தார். அவர் அதனூடாகக் கடந்து சென்றார், அவர்-அவர் இவ்விதமாக வெட்டியிழுத்துக் கொண்டிருந்தார். பிறகு அதனூடாகக் கடந்து போய் விட்டார்.

அங்கே கீழே, ஒரு மெதுவான வரிசையில் ஒரு பெண்மணி இருந்தாள், அவள் ஒரு குரல் வளை சுரப்பியில் ஏற்படும் வீக்கத்திலிருந்து (goiter) சுகமடைந்தாள். அவள் ஒரு குடையை வைத்திருந்து, தெருவில் மேலும் கீழும் நடந்தவாறு, பலமாகக் கத்திக் கொண்டே போய்க் கொண்டிருந்தாள்.

49. சிறு மனிதர் அருகில் கடந்து சென்றார். நான், "என்னுடைய சகோதரனே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக, நீர் விசுவாசிக்கிறீரா?" என்று கேட்டேன்.

அவர், "என்னுடைய முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறேன்" என்றார்.

நான், "இப்பொழுது வீட்டிற்குச் செல்லும்... உம்முடைய விசுவாசம் உம்மை சுகமாக்கும்" என்று கூறினேன், (அவர்) இவ்விதமாக தொடர்ந்து அருகே கடந்து போய் விட்டார். இதோ

அவர் வரிசையில் திரும்பவும் வந்தார். அவர், "சகோதரன் பிரன்ஹாமே, நான் சுகமடைந்து விட்டேன் என்று நீர்-நீர்-நீர் என்னிடம் கூறினீர். நான் இன்னும் திடீர் ஆட்டம் கொண்டவனாகத்தானே இருக்கிறேன்" என்றார்.

நான், "சகோதரனே, நீர் என்னை விசுவாசிப்பதாகச் சொன்னீரே" என்றேன்.

அவரும், "நான் விசுவாசிக்கிறேன்" என்றார்.

நான், "நீர் அதைப்போன்று நடிக்க வேண்டாம். நான் என்ன கூறினேனோ அதை நீர் விசுவாசிக்க வேண்டும்" என்றேன்.

அவர், "நல்லது, நான் அதை விசுவாசிக்கிறேன்" என்றார்.

நான், "நல்லது, நீர் ஏன் திரும்பி வந்து, நீர் சுகமடையவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்? அது எவ்வளவு எளிது என்று பார்?" என்றேன்.

அவர், "நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, அப்படியானால் நான் சுகமடைந்து விட்டேனா?" என்று கேட்டார்.

நான், "ஆம், ஐயா. நீங்கள் சுகமடைந்து விட்டீர்கள் என்று நீர் விசுவாசிக்கிறபடியே. அவர் என்னுடைய ஜெபத்தைக் கேட்டுவிட்டார் என்று விசுவாசிக்கிறீரா? நான் ஜெபிக்கும்போது, உத்தமமாயிருந்து, ஜனங்கள் என்னை நம்பும்படி செய்தால், ஜெபத்திற்கு முன்பாக எதுவும் நிற்காது என்று அவர் என்னிடம் சொன்னாரே. நீர் அதை விசுவாசிக்கிறீரா?" என்றேன்.

"ஆம், ஐயா. நான் அதை என்னுடைய முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறேன்" என்றார்.

நான், "தொடர்ந்து போய்க்கொண்டேயிரு" என்றேன்.

அவர், "சரி" என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து போகத் துவங்கினார். ஒரு சில நிமிடங்களில், இதோ அவர் வரிசையினூடாகத் திரும்பி வந்து, "எனக்கு இது இன்னும் நிற்கவில்லையே, சகோதரன் பிரன்ஹாமே" என்றார்.

நான், "நல்லது இப்பொழுது, இதோ பார். இப்பொழுது உனக்கு எப்போது நிற்கும் என்பதைக் குறித்து நான் பேசிக் கொண்டிருக்கவில்லை. ஒரு வாரத்திற்கு உனக்கு நிற்காமல் இருக்கலாம், அல்லது பத்து நாட்களுக்கோ, அல்லது மூன்று மாதங்களுக்கோ, அல்லது நான்கு மாதங்களுக்கோ, அல்லது இரண்டு வருடங்களுக்கோ உனக்கு நிற்காமல் இருக்கலாம். ஆபிரகாம் அவனுடையதின் பேரில் இருபத்தைந்து வருடங்கள் காத்திருந்தான்" என்று கூறினேன். பாருங்கள்? அது சரிதானா? வேதப்பூர்வமாக அதை நீங்கள் அறிவீர்கள். நான், "நான் உன்னிடம் கூறினதை நீ விசுவாசி" என்று கூறினேன்.

அவர், "சகோதரன் பிரன்ஹாமே, எனக்கு இது புரியவில்லையே" என்றார்.

நான், "சகோதரனே, நான் சத்தியத்தையே கூறினேன் என்று அறிவித்துக் கொண்டிருக்கிற தேவனுடைய தூதனானவர் தான் இதையும் என்னிடம் கூறினார். ஜனங்கள் என்னை நம்பும்படி என்னால் செய்து, உத்தமமாக இருக்க முடியுமானால், நான் ஜெபிக்கும்போது..." என்றேன்.

"ஓ, எனக்கு அது புரிகிறது. நீர் என்ன கூற வருகிறீர் என்பது எனக்குப் புரிகிறது." "நான்-நான்-நான் ஏற்கனவே சுகமடைந்து விட்டேன், நான் அது நிற்பதற்காக காத்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

நான், "அதுதான் சரி" என்றேன்.

"சரி" என்று கூறிவிட்டு, "நான் சுகமானேன்" என்று கூறினார். அப்படியே தொடர்ந்து சென்று கொண்டிருந்தார், உங்களுக்குத் தெரியும், தொடர்ந்து, "தேவனுக்குத் துதி உண்டாவதாக, நான் சுகமடைந்து விட்டேன்" என்றார்.

50. ஏறக்குறைய ஒரு மாதம், அல்லது இரண்டு மாதம் கழித்து, ஒருக்கால் ஏறக்குறைய நிச்சயமாக ஆறு வாரங்கள் இருக்க வேண்டுமென்று நான் சொல்லுவேன், நான் வேறொரு கூட்டத்தில் இருந்தேன். ஒரு ஒலிபரப்பை விட்டு, ஸ்டுடியோவை விட்டு

வெளியே வந்தேன், அது அந்த அரங்கத்தில் இருந்தது, நான் அங்கே வெளியே நடந்து சென்றேன், மேலும் ஒரு தொலைபேசி... வாயில் காப்போன் அங்கே நின்று கொண்டிருந்து, "உமக்கு-உமக்கு தொலைபேசி அழைப்பு வந்திருக்கிறது. அது இந்தியானாவிலிருந்து, உம்முடைய சொந்த வீட்டிலிருந்து வந்திருக்கிறது" என்றார்.

நல்லது, அது ஜெபர்ஸன்வில் என்பதற்குப் பதிலாக அங்கேயிருந்த இந்தியானாபோலிஸில் இருக்கும்படி நேரிட்டது. ஒரு சீமாட்டி, "நீர் ஒரு தெய்வீக சுகமளிப்பவரா?" என்று கேட்டாள்.

நான், "இல்லை, பெருமாட்டியே. நான் சகோதரன் பிரன்ஹாம்" என்றேன்.

அவள், "நல்லது, அதோ பாரும், நான் ஒரு...ஐக் கொண்டிருந்தேன். நான் இங்கே இந்தியானாபோலிஸிலிருந்து, இந்தியானாவிலிருந்து வருகிறேன். ஒவ்வொரு வருடமும் என்னுடைய சகோதரியோடு ஹூஸ்டனில் தன்னுடைய விடுமுறைக்காக போய் தங்கும் ஒரு-ஒரு மகன் எனக்கு இருந்தான். அவனுக்கு முடக்கு வாதம் இருந்தது. அவன் ஒரு குழந்தையாக இருந்த போதே, அவன் விழுந்து, ஒருவித காயமடைந்தான். அவனுக்கு வருடக்கணக்காக முடக்குவாதம் இருந்தது. ஒருசில வாரங்களுக்கு முன்னால், அவன் இங்கே வீட்டிற்கு வந்து, ஏதோவொரு தெய்வீக சுகமளிப்பவர் அவனைச் சுகப்படுத்தி விட்டதாகக் கூறிக் கொண்டிருந்தான். அவன் அப்படியே இங்கே சுற்றிலும் சென்று, 'கர்த்தருக்குத் துதி உண்டாவதாக, அவர் சுகப்படுத்தி விட்டார்' என்று உரக்க கத்திக் கொண்டிருந்தான், மற்றும் அதைப்போன்ற மற்ற எல்லாவற்றையும் செய்தான். அவன் மொத்த சுற்றுப்புறத்தாரையும் மிகவும் நிலைக்குலையப் பண்ணிக் கொண்டிருந்தான். ஏன், அங்கே அந்தப் பையனில் எந்த வித்தியாசமும் இல்லை. அவன்... நாங்கள் அவனிடம் கூறினோம், இப்பொழுது, நாங்கள் கிறிஸ்தவ ஜனங்கள்" என்றாள்.

அவர், “ஆனால் அம்மா, குருடான ஜனங்கள் காண்பதையும், செவிடான ஜனங்கள் கேட்பதையும், முடவர்கள் நடந்து செல்வதையும் நான்-நான் பார்த்தேன். அந்த வரிசையினூடாக கடந்து சென்றபோது, நான் சுகமடைந்து விட்டேன் என்று விசுவாசிக்கும்படி அவர் என்னிடம் கூறினார். தூதனானவர் அதை அவரிடம் கூறினதாக அவர் சொன்னார். சரியாக இருக்கிற மற்ற காரியங்களின் பேரில் தூதனானவர் அவரிடம் என்ன சொன்னாரோ அது சரியாகவே இருக்கிறது. நானும் சுகமடைந்து விட்டேன். நான் வித்தியாசமான எதையும் கூறும்படி யாருமே செய்யப்போவதில்லை. நான் சரியாக அதனோடு நிற்கப் போகிறேன்” என்றான். அவன் அப்படியே தொடர்ந்து போய்க்கொண்டிருந்தான்.

51. அவள், “அவன் அநேக வாரங்களாக அவ்வாறு சொல்லிக் கொண்டிருந்தான். அவன் வந்து, ஒரு நாற்காலியில் அமர்ந்து, ‘நல்லது, என்னைச் சுகப்படுத்தினதற்காக தேவனுக்கு நன்றி’ என்று கூறிவிட்டு, அவனால் எவ்வளவு கடுமையாக நடுங்க முடியுமோ அவ்வளவு கடுமையாக ஆடிக்கொண்டிருப்பான்” என்றாள்.

“ஜனங்கள்... ஏன், அவன் நிந்திக்கப்பட்டான். அண்டை வீட்டுக்காரர்கள் அவனைப் பார்த்து சிரித்தார்கள். அவர்கள் எல்லாரும், ‘நல்லது, அவன் சுகமடைந்து விட்டதாக நினைக்கிறேன். அதோ அவன் போகிறான். அவன் ஆடிக்கொண்டிருப்பதைப் பாருங்கள். இப்பொழுது, யாரோ ஒருவர் இதைப்போன்ற யாரோ ஒருவரை ஏமாற்றுவது என்பது ஒரு அவமானமாக இல்லையா?’ அதைப்போன்று (கூறினார்கள்). ‘இது ஒரு அவமானமாக இல்லையா?’ என்று அண்டை வீட்டார் கூறினார்கள். ‘நல்லது, அந்தப் பையனிடம் அதைக் கூறினதற்காக, அந்தப் பேர்வழியை கைதுசெய்து, நாட்டைவிட்டே துரத்த வேண்டும்’ என்று அதைப் போன்று கூறினார்கள்” என்றாள்.

52. நான் சத்தியத்தைக் கூறியிருந்தால், அது அவ்விதமே இருக்க வேண்டும். அது சரியே. ஆனால் அது சத்தியம் தான். எனவே அது தொடர்ந்து போய்க்கொண்டேயிருந்தது. அவள்,

"அவன்..." என்றாள். அவன் இரண்டாவது முறை திரும்பி வந்தபோது (நான் உங்களிடம் கூற மறந்துவிட்டேன்), அவன், "சகோதரன் பிரன்ஹாமே, நீர் என்னைச் சுகப்படுத்துவீரானால், நான் சரியாக இப்பொழுதே நூறு டாலர்கள் தொகையை உமக்குத் தருவேன்" என்றான்.

அதற்கு நான், "நீர் எனக்கு பத்து லட்சம் டாலர்கள் கொடுத்தாலும், என்னால் உன்னைச் சுகப்படுத்த முடியாது" என்று கூறினேன்.

அதன்பிறகு அவன், "முன்கழுத்துக் கழலையை உடைய அந்த ஸ்திரீயைக் குறித்து என்ன?" என்று கேட்டான்.

நான், "சகோதரனே, கிறிஸ்துவிலுள்ள அவளுடைய விசுவாசம் தான் அவளைச் சுகப்படுத்தினது" என்றேன்.

எனவே அவள், "நல்லது இப்பொழுது. அவன் அதைச் செய்து கொண்டிருந்தான்" என்றாள். அவன், "கடந்த சனிக்கிழமை... சென்ற வெள்ளிக்கிழமை மாலையில், பிற்பகல் (என்று நினைக்கிறேன்) அவன் உள்ளே வந்தான். ஆனால் வெளியே தேசத்திலிருந்து வந்த எங்கள்-எங்கள் நண்பர்களில் ஒருவர் எங்களைக் காண வந்தார், அவன் உள்ளே வந்து, வெட்டி இழுத்தவண்ணமே இருந்து (shaking), நாற்காலியில் உட்கார்ந்து, 'என்னைச் சுகப்படுத்தினதற்காக கர்த்தருக்கு துதி உண்டாவதாக' என்றான்" என்று கூறி(னாள்).

"நாட்டிலிருந்து வந்திருந்த என்னுடைய உறவினர், 'அவனுக்கு என்ன காரியம்' என்றார்" என்று கூறினாள்.

"ஓ," "அவன் அங்கே சென்றான், ஏதோவொரு பிரசங்கியார் அவனைப் பிடித்து, அவனை முழுவதும் உணர்ச்சிவசப்படுத்தி (worked up), அவன் சுகமடைந்து விட்டதாக அவனிடம் கூறினார். அதுமுதற்கொண்டு, இவன் இவ்விதமாக நடந்து கொள்கிறான். அவன்... பெற்றுக்கொள்வதற்கு முன்" என்றாள்.

அவன், "நல்லது, நான்-நான் சுகமடைந்து விட்டேன். நான்..." என்றான்.

"ஓ," அவள் சொன்னாள்... அவனைப் பார்த்து சிரிக்க வேண்டியிருந்தது, உங்களுக்குத் தெரியும். எனவே அதன்பிறகு, அவன் அவ்வாறு சொல்லுவதை நிறுத்தும்படிக்கு தாயார் அவனைப் பார்த்து சிரிக்க வேண்டியிருந்தது, உங்களுக்குத் தெரியும். "அது ஒரு நிந்தையைக் கொண்டு வந்து கொண்டிருந்தது" என்றாள்.

கிறிஸ்து எதற்காக எல்வாரியில் மரித்தாரோ அதற்காக சாட்சிகூறுவது ஒரு நிந்தையை ஒருபோதும் கொண்டுவரவே வராது. இல்லை, ஐயா. அவர் கல்வாரியில் மரித்தபோதே அவர் ஒவ்வொரு நபரையும் சுகப்படுத்தி விட்டார். அவர் அதைச் செய்து விட்டார். அது சரியே. நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

53. அதன்பிறகு இந்த... நல்லது, அவள், "அவன் நாற்காலியில் உட்கார்ந்தான். அவன் அவ்விதமாக ஆடிக்கொண்டுதான் இருந்தான், தொடர்ந்து ஆடிக்கொண்டேயிருந்தான். அவன் அழுது கொண்டிருக்க வேண்டியிருந்தது. நாங்கள் அவனைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தோம்" என்றாள்.

தொடர்ந்து அவள், "திடீரென்று, அவன் தன்னுடைய காலில் குதித்தான், அவனால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு அந்த நடுக்கம் நின்று, ஆடுவது நின்றுவிட்டது. இப்பொழுது, நான் சுகமடைந்து விட்டேன்" என்றான். அது சரியே. தேவனே அவனிடம் விஜயம் செய்திருந்தார்.

அவள், "சங்கை பிரன்ஹாமே அவர்களே, நாங்கள் அவனை ஒரு நாற்காலியில் இருத்தி, அதை நிச்சயப்படுத்தும்படிக்கு மணிநேரங்களாக அங்கேயே அவனை இருத்தினோம், அவனுக்கு சற்றும் நடுக்கம் இல்லவேயில்லை. நாங்கள் அவனை எங்கள் சபைக்கு, மிகவும் பிரபலமான ஒரு பாப்டிஸ்டு சபைக்கு அழைத்துச் சென்றோம்" என்றாள். அது இங்கிருந்து சரியாக இதினூடாக ஒலிபரப்பப்படுகிறது. தொடர்ந்து அவள், "நாங்கள்

அவனை சபைக்கு அழைத்துச் சென்றோம், அந்த மேய்ப்பர் அவனை உற்றுப்பார்த்துவிட்டு, 'அங்கே எந்த...?... அது உண்மைதான்' என்று கூறினார். அதன்பிறகு நாங்கள் அவனை மருத்துவரிடம் அழைத்துச் சென்றோம். அவரும், 'அங்கே எந்தத் தவறும் இல்லை" என்று கூறினார். இப்பொழுது, இது ஞாயிற்றுக்கிழமை, அவன் இன்னும்...?..." என்றாள்.

"ஏன், நான் சுகமடைந்து விட்டேன் என்று நான் உம்மிடம் கூறினேன்." ...?...

அவள், "இப்பொழுது, உமக்கு நூறு டாலர்கள் (தருவதாக) அவன் வாக்குப்பண்ணியிருந்தான், அதை எங்கே அனுப்ப வேண்டுமென்று அறிய விரும்புகிறேன்" என்றாள்.

அதற்கு நான், "ஓ, சகோதரியே... அவன் ஒரு பணக்காரனாக இருந்தால், அந்தப் பணத்தைக் கொண்டு என்ன செய்வது என்றே அறியாமல் இருக்கும் அளவுக்கு அதிக பணம் அவனிடம் இருக்கும். தெருவில் சென்று, அவன் முதலாவது காணும் கந்தை துணி அணிந்திருக்கும் சிறு பிள்ளைக்காக, அவன் உள்ளே சென்று, அந்தப் பிள்ளைக்கு நிறைய துணிகளை வாங்கிக்கொடு, அந்தக் குழந்தைக்கு அதை, ஏதோவொன்றைக் கொடு. அவர் சுகம் கொடுத்ததற்காக, தேவனுக்கு துதியை செலுத்து" என்றேன், (அது சரியே.)

54. இப்பொழுது, அது என்னவாக இருந்தது... அவர்கள் அவனைப் பார்த்து சிரிக்கத் தொடங்கினபோது, அவன் அதை நிறுத்தியிருந்தால் என்னவாகியிருக்கும்? நீங்கள் சரியாக அதனோடு தரித்திருங்கள்... நீங்கள் அதை விசுவாசிப்பீர்களானால், சரியாக அங்கேயே தரித்திருங்கள், நீங்கள் தரித்திருப்பதை நிறுத்தி விடாதீர்கள். சரியாக அங்கேயே தரித்திருங்கள், அப்பொழுது தேவன் அதைச் சரியாக ஆக்குவார்.

சரி. இப்பொழுது, ஞாபகம் கொள்ளுங்கள், நான் நாளை இரவுக்கு அதை உங்களுக்கு வாக்குப்பண்ணினேன், என்னால் எவ்வளவு கடுமையாக முயற்சிக்க முடியுமோ அவ்வளவு

கடுமையாக நான் முயற்சிக்கப் போகிறேன். ஒருசில நிமிடங்களில் நமக்கு ஒரு ஜெப வரிசை இருக்கப் போகிறது. நாம் ஜனங்களை இங்கே மேலே வரிசையில் கொண்டுவருவோம், தங்கள் ஜெப அட்டைகளை வைத்திருக்கிற அங்கேயுள்ள வியாதிப்பட்ட ஜனங்கள் யாவரும்: என்னால் கூடியமட்டும் அவ்வளவு நீண்ட நேரம் நான் அவர்களுக்காக ஜெபிக்கப் போகிறேன்.

இங்கே கேட்டுக்கொண்டிருக்கும் இந்த கூட்டத்தினரில் தேவன் ஏற்கனவே உங்களைச் சுகப்படுத்தி விட்டார் என்று உங்களில் யாராவது நினைப்பீர்களானால், நீங்கள் சுகமடைந்து விட்டீர்கள் என்று நினைக்கிறவர்கள் you, நீங்கள்... ஒருக்கால் அவர் உங்களிடம் காண்பிக்கும்படியாக நான் வேண்டிக்கொள்ள நீங்கள் விரும்பலாம், அப்படியானால் நீங்கள் உங்கள் கரத்தை உயர்த்தி, "நான்... நீங்கள் விரும்புகிறேன்..." என்று கூறுங்கள்.

சரியாக இங்கிருந்து நாம் அப்படியே ஒரு சிறு வரிசையை கொண்டிருப்போம். இங்கே வியாதிப்பட்டுள்ள ஜனங்கள் இருக்கிறார்கள். அது சரியாக இங்கே உள்ளே இருக்கிறது, இல்லையா? ஜனங்களைக் கொண்ட இந்த வரிசையிலா? சரி. ஒருவர்...

55. நல்லது, நாம் கேட்டுக்கொண்டிருக்கும் இந்தக் கூட்டத்தினரினூடாக வருவோம். நீங்கள் இப்பொழுது விசுவாசித்து, எங்களோடு கூட ஜெபம் பண்ணுவீர்களா? நாம் நம்முடைய தலைகளை வணங்குவோமாக.

எங்கள் பரலோகப் பிதாவே, என்னுடைய இருதயத்தை நீர் அறிந்திருக்கிறீர், எனக்கு என்ன தேவை என்று உமக்குத் தெரியும். ஒரு வேடிக்கை காட்டும்படிக்கு நான் இங்கே இருக்கவில்லை என்பதை நீர் அறிவீர். கிறிஸ்து ஜனங்களுக்கு அருளியிருக்கிற வாக்குத்தத்தங்களை உரிமைக்கோரும்படிக்கு முயற்சிக்க மாத்திரமே நான் இங்கேயிருக்கிறேன், கிறிஸ்துவை அவர்களிடம் உயர்த்தும்படி முயற்சித்து, அவர்கள் அவரிடம் விசுவாசம் வைத்து, சுகமடைய வேண்டுமென்று மாத்திரமே நான் முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். இப்பொழுதும், பிதாவே, நான் சத்தியத்தையே கூறியிருக்கிறேன் என்றும், அது உம்முடைய

வார்த்தையிலும், அந்த சாட்சிகளிலும் மற்றவைகளிலும் அது உள்ளது என்றும், நீர் இங்கேயிருக்கிறீர் என்றும் நீர் என்னை சாட்சி கொடும் (bear me record). நீர் ஜனங்களைச் சுகப்படுத்தப் போகிறீர் என்று நான் அறிவேன். தயவுகூர்ந்து, பிரலோகப் பிதாவே, இவர்கள் அவர்மேல் விசுவாசம் வைத்து, இன்றிரவு சுகத்தைப் பெற்றுக்கொள்ள இவர்களுக்கு உதவிசெய்யும். இதை அருளும், அன்புள்ள பிதாவே.

மேலும் இப்பொழுது... எங்கள் வாசலில் அந்நியர்கள் இருந்து, அவர்கள் இங்கே வியாதிப்பட்டவர்களாக இருப்பார்களானால், ஒருக்கால் இது கடைசி தடவையாக இருக்கலாம், நான் இதை வேண்டிக்கொள்வதற்கு காரணம் இதுதான், பிதாவே... அங்கே வெளியிலிருக்கும் யாரோ ஒருவரிடமுள்ள ஏதோவொன்றை, தவறாயிருக்கும் ஏதோவொன்றை நீர் எனக்குக் காண்பித்து, அந்த நபரை சுகப்படுத்துவாரானால்... அது மோசே தன்னுடைய கரத்தை அவன் மார்பில் வைத்துவிட்டு, மறுபடியும் அதை வெளியே திரும்ப எடுத்துக்கொண்டது போன்றது... இன்றிரவு எங்களுக்காக அதைச் செய்வீரா, பிதாவே? நான் உமக்காக காத்துக் கொண்டிருக்கிறேன், இப்பொழுது விசுவாசத்தினாலே, முன்னோக்கிப் போய்க்கொண்டிருந்து, உமது குமாரனாகிய இயேசுவின் நாமத்தில் எங்களுக்காக இதைச் செய்யப் போகிறீர் என்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

56. இப்பொழுது, பியானோ மெதுவாக, "என்னோடு தங்கியிரும்" என்று (இசைக்கப்படுமானால்.) அந்தப் பாடல் எனக்கு பிடிக்கும்: "என்னோடு தங்கியிரும்." தேவன் அதைச் செய்ய வேண்டுமென்று தான் விரும்புகிறேன்.

இபபொழுது, அன்பு ஜனங்களே, எனக்கு உங்களைத் தெரியாது என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் எப்பொழுதாவது அறிந்து கொள்ள ஒரே வழி என்னவென்றால், தேவன் மூலமாகத்தான் இருக்க வேண்டும். உங்களுக்கு அது தெரியும். ஏதோவொரு நாளில், நான் உங்களோடு கிறிஸ்துவுக்கு முன்பாக நின்றாக வேண்டும் என்பதை அறிந்தவனாக உங்களிடம் உத்தமமாக இருக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய

இருதயம் உங்களோடு சரியாக இல்லாமல் இருக்குமானால், கிறிஸ்துவுக்கு முன்பாக வருவதற்கு அது என்ன நன்மை செய்யும். நீங்களும் கூட சிரிக்கலாம், நீங்கள் அங்கேயிருந்து, சிரித்து, களிகூர்ந்து, ஒரு அற்புதமான நேரத்தை உடையவர்களாக இருந்தும், நானோ புறம்பே தள்ளப்படலாம் (castaway).

நான் இங்கே என்னுடைய முழு இருதயத்தோடும் போராடிக்கொண்டிருக்கிறேன். நான் இளைப்படைந்தவனாகவும், பலவீனமாகவும், களைப்புற்றவனாகவும், உங்களுக்கு உதவிசெய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். இப்பொழுது, நீங்கள் என்னை உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள். ஒருக்கால் கர்த்தராகிய இயேசு... இதைச் சுற்றிலும் - இந்தக் கூட்டத்தைச் சுற்றிலும் - என்னால் வெறுமனே ஏதோ ஓரிடத்திலுள்ள ஒரு நபரைப் பெற்றுக்கொள்ளக் கூடுமானால்... இப்பொழுது, நீங்கள் எல்லாரும் விசுவாசித்துக் கொண்டிருக்கிறீர்கள். அங்கே ஒரு கூட்ட ஜனங்கள் இருக்கிறார்கள்...

இது என்னவென்று - நாம் யாரென்று - அது இப்பொழுது இருக்கும் விதமாக, இந்த உணர்ச்சி என்னவென்று, நீங்கள் ஏதோவொரு நாளில் புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகிறேன். அப்படியே இதைப்போன்று தோன்றுகிறது - அங்கே உங்களுக்குள்ளே பத்தாயிரம் ஊசிகள் குத்திக்கொண்டிருந்து, உங்கள் ஜீவனை இழுப்பது, அவ்விதமாக இழுப்பது போன்று தோன்றுகிறது.

57. இப்பொழுது, உங்களால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு பயபக்தியாயிருங்கள். என்னால் பெற்றுக்கொள்ளக்கூடிய இந்த ஒரு வழியில் பின்னால் இதுவரை யாரோ ஒருவரை நான் காண்கிறேன். அது எங்கேயிருக்கிறது என்று நான் நிச்சயமில்லாதவனாயிருக்கிறேன். ஆனால் அந்த தூரத்தில், நான்-நான் தவறாயிருப்பேன் என்றால், தேவன் என்னை மன்னிப்பாராக. பலவீனமாகவும் இளைப்படைந்தவனாகவும் ஆகிக்கொண்டிருக்கிறேன்...?...

ஆனால் அங்கே கட்டம்போட்ட சட்டை (checkered shirt) அணிந்தவராயிருக்கும் அந்த மனிதனின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் அந்தச் சீமாட்டியை நான்-நான் நினைக்கிறேன். அது அவள்... தான் என்று நினைக்கிறேன். சகோதரியே, நீ மிகவும் பதட்டமாக இல்லையா, ஏதோவொரு வித நரம்பு சம்பந்தமான பிரச்சனை உனக்கிருக்கிறதா? அது சரி என்றால், உன் கரத்தை உயர்த்து? அது சரியே. அது... பொறுத்தது.

அப்படியே உனக்குப் பின்னால் இருக்கும் அந்த சீமாட்டியோடு ஏதோவொன்று, ஆனால் அது என்னவென்று என்னால் உன்னிடம் கூற முடியாது. இங்கேயிருக்கும் மற்ற சீமாட்டி இதற்காக மிகக் கடினமாக கூப்பிட்டுக் கொண்டிருக்கிறாள்.

நீ-நீ பதட்டமுள்ளவளாக இருக்கிறாய், இல்லையா, சகோதரியே? இப்பொழுது, அப்படியே வீட்டிற்குச் செல். நீ சுகமடையப் போகிறாய். நீ என்னை விசுவாசிக்கிறாயா? சரி, இனியும் நீ பதட்டமாக இருக்கிறாய் என்று ஒருபோதும் சொல்லாதே. வீட்டிற்குச் சென்று, அப்படியே களிகூர்ந்து கொண்டு, ஒரு நல்ல நேரத்தைக் கொண்டிருந்து, உன்னுடைய குடும்பத்தை வளர்த்து. அன்பு (சகோதரியே), தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக.

58. இப்பொழுது, இப்பொழுது, எனக்கு நிச்சயம் இல்லை. நான் மிகவும் பலவீனமாக இருக்கிறேன், நண்பர்களே. ஆனால் இந்த நீலநிற வஸ்திரத்தை உடுத்தியவளாய் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிற இந்த சீமாட்டி, சரியாக இங்கே அமர்ந்திருக்கிறாள் என்று நம்புகிறேன்... சரியாக இங்கே இந்த இருக்கையின் கடைசியில் இருக்கும் உனக்கு ஏதோ தவறு நேர்ந்திருக்கவில்லையா? அது... இல்லையா? இப்பொழுது, என்னால் இந்தப்பாகத்தைச் சரியாகச் செய்ய முடியவில்லை, ஆனால் நான்... அங்கே கடைப்பெருங்குடல் அமைப்பில் ஏதோ தவறு இல்லையா, பெருங்குடல் தொல்லை தானே? அது சரிதானா, சகோதரியே? அது சரி என்றால், உன்னுடைய கரத்தை மேலே உயர்த்து. சரி. இப்பொழுது நீ என்னை விசுவாசிக்கிறாயா? சரி. இனியும் அதைக் குறித்து ஒருபோதும் எண்ணிப் பார்க்காதே.

வீட்டிற்குப் போ. உனக்கு விருப்பமானதை சாப்பிடு, ஆசீர்வதிக்கப்படுவாயாக.

அந்த சீமாட்டிக்கு அது போய்விட்டது என்று நம்புகிறேன்... சரியாக அப்போதே யாரோ ஒருவருடைய முன்கழுத்துக் கழலை மறைந்துவிட்டது. அது அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கும் அந்த மூன்றாவது சீமாட்டி என்று நம்புகிறேன். உனக்கு ஒரு முன்கழுத்துக் கழலை இருந்ததா, சகோதரியே? அது சரிதானா? நல்லது, அது உன்னைவிட்டுப் போய்விட்டது. தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக, அங்கே... போன்று உன்னுடைய கரத்தை மேலே உயர்த்தியுள்ளவர். அது சரியே. தேவனுடைய ஆசீர்வாதம் உன்மேல் இருக்கிறது, சகோதரியே. அது வட்டமடித்துக் கொண்டிருந்ததை நான் உணர்ந்தேன்.

59. இப்பொழுது, நாம் வேறு ஏதோவொரு இடத்திற்குப் போவோம். நாம் ...க்குப் போகலாம். உங்களால் கூடுமானவரை, எல்லாரும் பயபக்தியாயிருங்கள்... சரியாக இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிற அந்தச் சீமாட்டி, நீ உன்னுடைய கரத்தில் ஒரு ஜெப அட்டையை வைத்திருக்கிறாய். அந்த வரிசைக்காக ஒரு ஜெப அட்டையை நீ பெற்றிருக்கிறாயா? ஒருக்கால் நான் அவளை அழைக்க வேண்டாம். சொல்லுங்கள், வரிசையில் இருக்கிற உங்களில் சிலர் ஒருக்கால்...

பின்னால் உள்ள இடத்தில் உன் எண்ணா? உன் எண் எவ்வளவு தூரம் பின்னாலுள்ளது? அங்கிருந்து அவர்கள் அழைப்பார்களா என்று எனக்குத் தெரியவில்லை. உனக்கு ஏதோவொரு தொல்லை இருக்கிறது, அது இல்லையா? அது என்னவென்று என்னால் சரியாகக் கூற முடியவில்லை. ஆனால் நான் அதை விசுவாசிக்கிறேன்... உனக்கு ஒரு அறுவைசிகிச்சை நடக்கவில்லையா - உனக்கு அது செய்யப்படவில்லையா? உனக்கு ஒரு அறுவைசிகிச்சை நடந்ததா? நான் உன்னை ஒரு அறுவை சிகிச்சை நடக்கும் அறையில் காண்கிறேன். (இப்பொழுது, நண்பர்களே, நான் இப்பொழுது எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்பதை நீங்கள் காண முடியும்படி விரும்புகிறேன்.) ஆமாம், அது புற்றுநோய்க்கான ஒரு

அறுவைசிகிச்சை. அது திரும்பவும் கூட உன்மேல் வந்திருக்கிறது, இல்லையா? சரி. இப்பொழுது நீ என்னை உன் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறாயா? இயேசு கிறிஸ்து உன்னைச் சுகப்படுத்துகிறார். வீட்டிற்குச் சென்று, முழு... கொண்டும் விசுவாசி.

60. உன்னுடைய கையில் காயம்பட்ட கையைத் தாங்கும் அந்த தூக்கியை வைத்துக்கொண்டு அந்த சீமாட்டி அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். உன்னுடைய கையில் ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது. இப்பொழுது, நாம் சற்றுநேரம் பார்ப்போம். இப்பொழுது, சகோதரியே, விசுவாசமுள்ளவளாயிரு. நான் வியாதிப்பட்ட ஜனங்களிடம் வர முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். முடமானவர்களாக இருக்கும் ஜனங்களைப் பார்க்கிற யாரும், அவர்களுக்கு என்ன தவறு இருக்கிறது என்பதைக் காண முடியும். ஆனால் இது பரம இரகசியமான ஏதோவொன்றாக உள்ளது.

இப்பொழுது, இந்தவிதமாகப் பாருங்கள், சீமாட்டியே. அவள் தன்னுடைய கையை காயம்பட்ட கையைத் தாங்கும் தூக்கியில் வைத்திருக்கிறாள். ஓ, என்னே. அதுவும் கூட புற்றுநோயாக இருக்கிறது. அது சரியல்லவா? உங்களுக்காக ஜெபிக்கப்படவில்லையா என்று கூறுங்கள்? யாரோ ஒருவர் உங்களுக்காக ஜெபிக்கவில்லையா? இவை எல்லாம் சரியா இல்லையா என்பதைக் குறித்து நீர் ஒருவிதத்தில் வியந்து கொண்டிருக்கிறீர், இல்லையா? சரி. இப்பொழுது நீங்கள் முன்னால் சென்று, உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள், அப்பொழுது சுகமடைவீர்கள். வெறுமனே... விசுவாசியுங்கள்.

61. அந்தச் சிறு பெண்பிள்ளை, சரியாக அங்கே பின்னால் நின்றுகொண்டிருக்கிறாள். அந்த தாயார், அவர்களோடு கூட அவளுடைய சிறு மகளும், அங்கே அந்த சீமாட்டியின் பக்கத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள். அங்கே உன்னோடு ஏதோ தவறு இருந்தது போன்று தெரிகிறது, ஒருவித கறுப்பாக காணப்படுகிற ஏதோவொன்று அந்தச் சிறு பெண்பிள்ளையின் மேல் தொங்கிக் கொண்டிருக்கிறது. சற்று பொறுங்கள். இனிய இருதயமே, இங்கே மேலே நோக்கிப் பார், அந்தச் சிறுமி. நான் உன்னைப் பார்க்கட்டும். ஓ, ஆமாம். சரி. அந்தச் சிறுமிக்கு ஒரு... இருக்கிறது.

எனக்கு இப்பொழுது நிச்சயம் இல்லை; அது ஒன்றில் அவளுடைய சிறுநீர்ப்பை அல்லது அவளுடைய சிறுநீரகங்களாக இருக்கிறது. அது ஒரு சிறுநீரக தொல்லையாக இருக்கிறது, நான் மிகவும் நிச்சயமுடையவனாயிருக்கிறேன், சரியாக உள்ளே... அது சரிதானா, சகோதரியே? ஒரு சிறுநீரக கோளாறு? இனிய இருதயமே, எழுந்து நில். அது... எங்கே என்று பார்ப்போம். அதோ அது இருக்கிறது. சரி. அந்த சிறுநீரக கோளாறு உன்னை விட்டு போகப் போகிறது, இனிய இருதயமே. மகளே, நீ சுகமடையப் போகிறாய். நீ இயேசுவை நேசிக்கிறாயா? நீ இயேசுவை நேசிப்பாய் என்றால், உன்னுடைய சிறு கரத்தை அவ்விதமாக மேலே உயர்த்து. அது சரியே. ஓ, அது அருமையானது. ஆமென். அப்படியே விசுவாசம் கொண்டிரு. உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள்.

அது ... போன்று தெரிகிறது. இப்பொழுது, நான்... வெட்டி வெட்டி இழுத்துக் கொண்டிருக்கும் இந்த சீமாட்டி என்று நம்புகிறேன், அங்கே அவளிடமிருந்து இரண்டாவது மேலே. உனக்கு முன்கழுத்துக் கழலை இருக்கிறதா, சகோதரியே? அங்கே ஒரு வளர்ச்சி இருந்தது, சரியாக அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கும் அந்த சீமாட்டியில் ஒரு முன்கழுத்துக் கழலை இருக்கிறது, சரியாக அங்கே பக்கத்தில் இருப்பவள்? ஒரு முன்கழுத்துக் கழலையை அங்கே உள்ளே கொண்டிருந்த யாரோ ஒருவரைப்போன்று அது தெரிகிறது, அவள் எங்கோ ஓரிடத்தில் (இருக்கிறாள்), அது போய்விட்டது. அங்கே அது இருந்தது. என்னால் பார்க்க முடியாதிருந்தது... சரி, சகோதரியே, தொண்டையில் அதை விழுங்கிவிடு. சரி, அது போய்விட்டது. அதோ இப்பொழுது, நீ சுகமடைந்து விட்டாய். தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

அந்த முன்கழுத்துக் கழலை போய்விட்டது என்று என்னால் கூற முடியும். ஆனால் அது எங்கேயிருந்தது என்பதை என்னால் கூற முடியாதிருந்தது.

62. ஓ, கர்த்தராகிய இயேசு இல்லையா? இப்பொழுது, கவனியுங்கள், நண்பர்களே... இப்பொழுது சரியாக உணருகிறீர்கள்,

இல்லையா, தாயாரே. அவர்கள் அப்படியே... அதோ அது இருக்கிறது.

நீங்கள், "கர்த்தருக்கு துதி உண்டாவதாக" என்று கூறுங்கள். இப்பொழுது, நண்பர்களே, கவனியுங்கள். இப்பொழுது உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள்.

தன்னால் (கூடியமட்டும்) சிறந்தமுறையில், பற்றிப்பிடிக்க முயற்சித்துக்கொண்டிருக்கும் ஒரு சீமாட்டி சரியாக அதோ அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். உன்னிடத்தில் என்ன தவறு இருக்கிறது என்று என்னால் காண முடியவில்லை, சகோதரியே, சிவப்பு நிற வஸ்திரத்தை உடுத்தினவர்களாக அங்கேயிருக்கும் நீங்கள் தான், அந்த சிவப்பு நிற கோட்டு இங்கே குறுக்காக கிடக்கிறதோ, அவர்கள் தான். நீங்கள்-நீங்கள் என்னைத் தொடர்பு கொள்ள முயற்சித்துக் கொண்டிருந்தீர்கள், இல்லையா, சகோதரியே? முயற்சித்துக் கொண்டிருந்தீர்கள்... அங்கே உங்களோடு ஏதோவொன்று உள்ளது, அங்கே ஏதோ தவறாக இல்லையா? ஆம், நான் விசுவாசிக்கிறேன்... எனக்கு அதிக நிச்சயம் இல்லை. அது ஒரு நரம்பு சம்பந்தமான நோயாக இருக்கிறது, ஏனென்றால் அங்கே ஒரு, ஒரு காக்காய் வலிப்பு என்று நம்புகிறேன். அது சரியல்லவா? வலிப்புகள் தானா? அது சரி என்றால், உன் கரத்தை அசைத்துக் காட்டு. சரி, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. நான் தேவனுடைய ஊழியக்காரன் என்றும், அவருடைய தீர்க்கதரிசி என்றும் நீ விசுவாசிக்கிறாயா? தேவன் என்னிடம் கூறுவதற்கு புறம்பே, உன்னிடம் என்ன தவறு இருந்தது என்பதை நான் எப்படி அறிந்திருப்பேன்? இப்பொழுது, இங்கே நீ என்னைக் கண்டுபிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தாய், உன்னுடைய துடிப்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இப்பொழுது, நீ வீட்டிற்குச் சென்று, அதைக் குறித்து மறந்து விட்டு, "எனக்கு இனியும் காக்காய் வலிப்புகள் வராது" என்று கூறு, அப்பொழுது உனக்கு ஒருபோதும் அது வராது. தொடர்ந்து போ, நீ சுகமாகிவிடுவாய். நீ அதை விசுவாசிக்கிறாயா? நீ நேசிக்கிறாய்... உன்னுடைய ஜீவியம் முழுவதும் நீ தேவனுக்கு சேவை செய்வாயா? தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக.

63. நாம் சற்றுநேரம் நம்முடைய தலைகளை வணங்குவோமாக. எங்கள் பரலோகப் பிதாவே, நான் சரியாக இப்பொழுது உமக்கு நன்றிசெலுத்த விரும்புகிறேன். கர்த்தாவே, வெளிப்படையாக, ஒருகணம் என்னால் ஜனங்களிடம் பேச முடியுமானால், அவர்களுடைய முகத்தின்மேல் ஒரு ஊக்கமளிக்கும் பார்வையைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அவர்களில் சிலர் தொடர்புகொண்டு, விசுவாசத்தினாலே பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்... உம்முடைய நன்மைகளுக்காகவும் இரக்கத்திற்காகவும் என்னுடைய முழு இருதயத்தோடும் உமக்கு நன்றி செலுத்துகிறேன். கடந்த இந்த இரண்டு வாரங்களினூடாக நீர் முடவர்களையும், குருடர்களையும், முடக்கு வாதத்தால் தாக்கப்பட்டவர்களையும் நீர் சுகப்படுதின எல்லாவற்றிற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறோம், காசநோயைக் கொண்டிருந்த ஜனங்கள், அவர்கள் ஏற்கனவே மருத்துவர்கள் மூலமாக நலமாக இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது; கட்டிகள் மறைந்து போயின, அவைகளை எங்குமே கண்டுபிடிக்கக் கூட முடியவில்லை. ஜனங்களைக் கட்டி வைத்திருந்த பெரிய பயங்கரமான புற்றுநோய்கள் கூட போய்விட்டன; அவைகளின் சுவட்டையும் மருத்துவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவைகள் போய்விட்டன, ஏனென்றால் கிறிஸ்துவிலுள்ள விசுவாசம் அவைகளை எடுத்துப்போட்டு விட்டது.

இந்த ஜனங்களை ஆசீர்வதியும், பிதாவே. இன்றிரவு நாங்கள் ஜெப வரிசையைத் தொடங்குகையில், அநேக நூற்றுக்கணக்கானவர்கள் தாமே இன்றிரவு சுகமடைவார்களாக. உம்முடைய நாமம் மகிமைப்படும்படியாக, இதை அருளும், கர்த்தாவே, நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

64. சரி, சற்று பொறுங்கள். ஓ, என்னே. எல்லாருமே சுகமடைந்து கொண்டிருக்கிறீர்கள் என்பது போன்று தோன்றுகிறது. எவ்வளவு மகிமையாக உள்ளது. எவ்வளவு அற்புதமாக இருக்கிறது. என்னவொரு விசுவாசம். நண்பர்களே, என்னுடைய வார்த்தைகளை நம்புங்கள். நீங்கள் உங்களைத்தானே விடுதலையாவதற்கு பயப்படுகிறீர்கள். அதனோடு தேவனை நம்ப

பயப்படுகிறீர்கள். பயப்படாதீர்கள், அவரால் இன்னும் கூடுதலாக என்னதான் செய்ய முடியும்? அவரால் இதற்கு மேலும் அதிகமாகச் செய்ய முடியாது.

இதோ ஒரு காரியம் இருக்கிறது. நான் ஒருபோதும்... நான் இதை-இதை விட்டுச்செல்ல விரும்புகிறேன், உங்கள் மேய்ப்பர்... நீங்கள் ஜெபிக்கப்படும்படிக்கு ஜனங்களிடமாக, தேசத்தைச் சுற்றிலும் குறுக்கே ஓடிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. உங்கள் மேய்ப்பருக்கு உங்களுக்காக ஜெபிக்க அதிகாரம் உண்டு.

இப்பொழுது, இந்த சபையின் மேய்ப்பர்கள், தாங்கள் இங்கு வந்து, நான் முதலில் இங்கு வருவதற்கு முன்பு, ஜனங்கள் அவர்களினூடாக கடந்து செல்லட்டும், அவ்வாறு செய்வார்களா என்று இங்கே ஒத்துழைப்பு கொடுக்கும் இந்த சபையிலுள்ள மேய்ப்பர்களிடம் நான் கேட்கப் போகிறேன். இதனூடாக வருகிற நோயாளிகளில் சிலரை விசாரிக்க விரும்புகிறேன். (சரி.) ... ஜனங்களிடம் தவறாயுள்ள ஏதாவது. மேய்ப்பர்களாகிய நீங்கள் சற்று நேரம் இங்கே வருவீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் இரண்டு வரிசைகளில் நிற்கத் தொடங்க விரும்புகிறேன், கீழே இங்கே இந்த மேடை நெடுகிலும். அல்லது இங்கே, சரியாக இங்கே மேலே வாருங்கள், அப்பொழுது நான் படிகளின் கீழே நிற்பேன்.

இப்பொழுது, இங்கேயிருக்கும் சபையாராகிய நீங்கள் விசுவாசிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். நீங்கள் என்னை விசுவாசிக்கிறீர்களா?

65. சரியாக இப்பொழுதே அந்தப் புண் அந்த இடத்தை விட்டு, அது எங்கிருந்ததோ அந்த இடத்தை விட்டு, அந்தப் புற்றுநோய் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட இடத்தை விட்டுப் போய்க்கொண்டிருக்கிறது. அது சரியல்லவா, சீமாட்டியே? இப்பொழுது, நீங்கள் தொடர்ந்து போய்க்கொண்டிருங்கள்.

இங்கே வேறொரு காரியம் இருக்கிறது, சகோதரியே. நீங்கள்... நீங்கள் தேவனோடு கூட நெருக்கமாக நடக்க வாஞ்சிக்கிறீர்கள், இல்லையா? அவரோடு நெருங்கி நடக்க விரும்புகிறீர்கள்?

இப்பொழுது, நீங்கள் முன்னால் சென்று, அதைச் செய்யுங்கள். பாருங்கள்? நீங்கள் அதை விரும்பினீர்கள். நீங்கள் நெருக்கமாக நடக்கும்படிக்கு ஜெபித்துக் கொண்டு வருகிறீர்கள். அது சரியல்லவா? அப்படியானால் நெருக்கமாக நடக்கும்படிக்கு நீங்கள் ஜெபித்தீர்கள்.

இப்பொழுது, அப்படியே அவர்கள் ஜனங்களை வரிசையில் நிற்கப் பண்ணிக் கொண்டிருக்கையில், உங்களிடம் கூற என்னிடம் ஒரு காரியம் உள்ளது. ஒருசில நிமிடங்களுக்கு முன்பு அது உன்மேல் அசைவாடிக் கொண்டிருந்ததை என்னால் காண முடிந்தது, நான் உன்னிடம் கூற வரவில்லை. இன்றிரவு என்னைப் பார்க்க வர உனக்கு முடியும்படிக்கு நீ கடினமாக ஜெபம் பண்ணினாய். அது சரிதானா? இங்கே உனக்காக தேவன் ஏதோவொன்றைச் செய்யும்படிக்கு ஜெபித்தாய். அவர் உன்னை சுகமாக்கி விடுவார் என்றால், நீ உன் ஜீவியத்தின் எஞ்சிய நாட்களில் முழு இருதயத்தோடும் அவரைச் சேவிப்பாய் என்று நீயும் கூட தேவனுக்கு ஒரு வாக்குப்பண்ணினாய், இல்லையா. அவர் இப்பொழுதே அதைச் செய்துவிட்டார். இப்பொழுது, நீ தொடர்ந்து சென்று, உன் முழு இருதயத்தோடும் அவரைச் சேவித்து, தேவனிடத்தில் விசுவாசம் கொண்டிரு.

66. இயேசு கிறிஸ்து ஜனங்களைச் சுகப்படுத்தப் போகிறார் என்று விசுவாசிக்கும்படியாக தங்கள் தலைகளை வணங்கியவர்களாக இங்கே நின்று கொண்டிருக்கிற ஒருகூட்ட ஊழியக்காரர்களுக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். சகோதரன் எங்கே வரிசையை அழைப்பார் என்று தெரியவில்லை. நான் அதை அவரிடமே விட்டுவிடப் போகிறேன்.

நான் இங்கே கீழே கடைசியில் நடக்கப் போகிறேன். ஜனங்கள் ஒவ்வொருவரையும் இந்த வரிசையினூடாக வர விடுங்கள், அவர்கள் இந்த ஊழியக்காரர்களால் முதலில் ஜெபிக்கப்படட்டும். அவர்களுடைய - ஐ ஆராய்ந்து பார்க்க விரும்புகிறேன், இங்கே கீழே வரிசையின் கடைசியில், ஜனங்கள் அதை விட்டு வரும்போது, அவர்களுக்கு என்ன சம்பவிக்கிறது என்பதைக் காண விரும்புகிறேன்.

இப்பொழுது, அந்த சகோதரர்கள் தாங்கள் விசுவாசிப்பதாக என்னிடம் கூறுகிறார்கள். நான் விசுவாசிக்கிறேன். அவர்கள் விசுவாசிக்கிறார்கள். அவர்கள் விசுவாசித்து, நீங்களும் விசுவாசிப்பீர்களானால், நீங்கள் தேவனைத் துதிக்கத் தொடங்குங்கள். நீங்கள் இங்கே முழங்கால்படியிடும்போது... நீங்கள் முடவர்களாக இருந்தால் நடந்து செல்வீர்கள். நீங்கள் குருடர்களாக இருந்தால், காண்பீர்கள். நீங்கள்-நீங்கள் செவிடர்களாக இருந்தால், கேட்பீர்கள். அது சரியே. நீங்கள் இங்கே முழங்கால்படியிடும் போது... உங்களுக்கு வியாதியிருந்தால், அது உங்களை விட்டுப் போய்விடும்.

அதன்பிறகு, நான் இங்கிருந்து போகும்போது, வியாதியஸ்தருக்காக ஜெபிக்க உங்கள் மேய்ப்பருக்கு உரிமை உண்டு என்பதை உணருவீர்கள். அவர்கள் நல்லவர்களும், தேவனால் இரட்சிக்கப்பட்டவர்களும், பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட மனிதர்களுமாயிருக்கிறார்கள். அது சரியே. வியாதியஸ்தருக்காக ஜெபிக்கும்படியாக நான் நிச்சயமாகவே ஒப்புதலை அவர்கள் மேல் வைக்கிறேன்.

67. சரி. நான் ஜெபிக்கையில், சற்று பொறுங்கள்... பரலோகப் பிதாவே, என்னுடைய சரீரம் பலவீனமடைந்திருப்பதை நீர் அறிவீர். நான் என்ன செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறேன் என்பது உமக்குத் தெரியும். சுகமடைய விரும்புகிற ஜனங்கள் இங்கேயிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ஓ நித்திய தேவனே, இப்பொழுது இன்றிரவு எனக்கு உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளைகளை இங்கே இந்த மேடையின்மேல் வரிசையில் கொண்டுவந்து கொண்டிருக்கையில், விசுவாசமுள்ள உமது ஊழியக்காரர்கள், அவர்கள் ஒவ்வொருவரும் தாழ்த்தப்பட்ட தலையை உடையவர்களாய் பாவிகள் மேல் உயரே பரிசுத்த கரங்களை அசைத்துக் கட்டுகிறவர்களாய், கர்த்தராகிய இயேசுவின் மேல் விசுவாசம் வைத்து, இரட்சிக்கப்படும்படி அவர்களிடம் கூறிக் கொண்டிருக்கிறார்கள். சுகமளித்தலைக் குறித்து அவர்களுக்கு கற்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அதில் விசுவாசிக்கிறார்கள். மேலும் இப்பொழுது, அவர்களுடைய போதனையின் உறுதிப்படுத்தல் நடக்கிறது. மேலும் இப்பொழுதும்,

பிதாவே, அவர்கள் யாருக்காக தைரியமாக நின்று கொண்டிருக்கிறார்களோ, அந்த ஜனங்களுக்கு முன்பாக பலனைப் பெற்றுக்கொள்வார்களாக. இங்கே இன்றிரவு நின்றுகொண்டிருக்கும் அவர்களை நான் கொண்டிருக்கிறேன், மேலும் தெய்வீக சுகமளித்தல் மற்றும் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பிரதிநிதிகளாக இங்கே நின்றுகொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுதும், பிதாவே, அவர்கள் அந்த ஜனங்கள் மேல் தங்கள் கரங்களை வைக்கும்போது, ஒவ்வொரு அசுத்த ஆவியும் ஜனங்களை விட்டுப்போவதாக. குருட்டு பிசாசுகள் குருடர்களை விட்டுப் போவதாக. செவிடர்கள் கேட்பார்களாக, ஊமையர்கள் பேசுவார்களாக. முடவர்கள் நடப்பார்களாக. புற்றுநோய்கள் மறைந்து போவதாக, காசநோயும், எல்லாவிதமான வியாதிகளும் விலகிப்போவதாக. இது அவர்களுடைய இருதயங்களை எழுச்சியூட்டுகிறதும், ஒருக்காலும் நின்றுபோகாத ஒரு பழைமை நாகரீகமான எழுப்புதல் இங்கே உள்ளே நடக்கும்படி வைக்கிறதுமான மிகவும் அற்புதமான இரவுகளில் ஒன்றாக இருப்பதாக. இதை அருளும், கர்த்தாவே.

நான் இங்கே இந்த வரிசையின் கடைசியில் நின்று கொண்டிருக்கிறேன், கர்த்தாவே. மேடையை விட்டுப் வெளியே வரும் ஒவ்வொரு நபரும் தாங்கள் பெற்ற சுகத்திற்காக தேவனைத் துதித்துக்கொண்டிருக்கும்படி அருளும். உம்முடைய தாழ்மையுள்ள ஊழியனின் ஜெபத்தைக் கேட்டருளும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், நான் இதைக் கேட்கிறேன். ஆமென்.

68. சரி. ஜெப அட்டையை வைத்திருக்கிற ஒவ்வொருவரும், நீங்கள் விரும்புகிற எந்தவிதத்திலாவது அவர்களை வரிசையில் நிறுத்துங்கள். [ஒரு சகோதரன் ஜெப வரிசையை அழைக்கிறார் - ஆசிரியர்.]

மற்ற எல்லாவிடங்களிலும் உள்ள எல்லாரும் ஜெபத்தில் இருங்கள். இவர்கள் வெளியே வந்த உடனே, நாங்கள் வேறொரு கூட்டத்தினரை உள்ளே கொண்டு வருவோம், விரும்புகிற எல்லாரும்...

இப்பொழுது, உங்களுக்கு ஏதோ தவறு இருந்து, அது என்னவென்று உங்களுக்குத் தெரியாமல் இருந்து, அதை நீங்கள் கண்டுபிடிக்க விரும்புவீர்களானால்... உங்களுடைய ஜீவியத்தில் உங்களை அடக்கி வைத்திருக்கும் ஏதோவொன்று உங்களுக்கு இருக்குமானால், இந்த வரிசையில் வராதீர்கள். காத்திருந்து, நாளை இரவு வாருங்கள், அல்லது உங்களுக்கு என்ன தவறு இருக்கிறது என்பதை கண்டுபிடிக்கும்படி அந்த பகுத்தறியும் ஆவிக்காக அடுத்த இரவு வாருங்கள். புரிகிறதா? ஆனால் விசுவாசிக்க உங்களுக்கு விசுவாசம் இருக்குமானால், இன்றிரவு இங்கே உள்ளே வாருங்கள். உள்ளே வந்து, சுகம் பெறுங்கள். எல்லாரும், இவைகள் முடிந்த உடனே, மற்றவர்களை விடுங்கள்...

எல்லாவிடங்களிலும் உள்ள எல்லாருமே ஜெபம் பண்ணுங்கள். கிறிஸ்தவர்களே, இது ஜெபம் பண்ணுவதற்கு உங்கள் கடமையாக இருக்கிறது. நீங்கள் போர் வீரர்களாக இருக்கிறீர்கள்.